உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] சோபகிருது-௵ மாசி௴ [பகுதி-ச.

## உள்ளுறை.


நல்லிசைப்புலமை மெல்லியலார்கள். } பத்திராசிரியர். க0கூ
ஆராய்ச்சி.— } ககசு

தமிழே அநேக பாஷைகளுக்கு இலக்கங்கொடுத்தது.— } ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. கஉ0

உபசர்க்கம்.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. கஉச

நுண்பொருட்கோவை.—அ. சண்முகம்பிள்ளை. கஉகூ

தருக்கசூத்திர முதற்பாடம்.—எஸ். பால்வண்ணமுதலியார். கஙங

உள்ளது.—ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர். கஙஅ

புத்தகக்குறிப்பு.—எஸ். சாமிநாதையர் கசஎ

திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். கஎ

பன்னிருபாட்டியல்.— உரு

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பரீக்ஷையில்
மாணாக்கர் தேறிய விவரம்.


மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ-4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

உ

திருச்சிற்றம்பலம்.

# அறிவிப்பு.

ஸ்ரீ சேதுஸம்ஸ்தானவரலாற்றினைப், பழைய சிலாசாஸனங்களை யும், தாமிரப்பட்டயங்களையும், புலவர் பாடல்களையும், அவ்வரலாறு குறித்துள்ள பழைய ஏடுகளையும், தேவஸ்தானம், ஸத்ரம், தர்மா ஸனம், தர்மமகிமை, சாரிமகிமை, முதலியவற்றிற்குரிய பழைய கண க்குகளையும், இதுகாறும் அவ்வரலாறுபற்றி வெளிவந்துள்ள நூல்க ளையும் பிறவற்றையும் பெருங்கருவியாகக்கொண்டு நன்காராய்ந்து சரித்திரமுறையின்வைத்துச் 'சேதுபதி சரிதை' என்னும் பெய ரான் இச்சங்கத்தினின்று, யாம் வெளியிடக்கருதி அதற்குத் தக்க வாறு முயன்று வருதலால் அத்தகைப்பட்டயங்களும் பாடல்களும் ஏடுகளும் உடைய நல்லோர் தாம் அவ்வாறுடையவற்றை எமக்க விப்பின் அவற்றைப் பிரதிசெய்து கோடற்கு வேண்டுவன விரை புரியலாகுமென்று அறிவிக்கின்றேம்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

உ

கடவுள்துணை

# செந்தமிழ்.

தொகுதி-உ.] சோபகிருதுஸு மாசிமீ. [பகுதி-ச.

## நல்லிசைப்புலமை மெல்லியலார்கள்.

ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனார் மரபியலில் 'மாவுமாக் களுமையறிவினவே' 'மக்கடாமே யாறறிவுயிரே' என்பனவற்றால் மானிடரை மாக்கள், மக்கள் என இருதிறத்தினராகப் பகுத்தோதினர். மாக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வுமட்டிற் பெற்று மனவுணர்ச்சியிலராயினரெனவும், மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றி மனமென்பதோரறிவும் உடையராயினர் எனவுங் கூறுவர். இது மானிடரை அறிவு வேற்றுமைபற்றிப் பகுத்தபகுப்பாகும். இனி அவயவவேற்றுமைபற்றி மானிடர் ஆண் பெண் என இருதிறத்தினராவர். ஆணியல்பு மிக்கஅலி ஆண்பாலெனவும், பெண்ணியல்புமிக்கபேடி பெண்பாலெனவும் வழங்கப்படுமாகலின், அவயவம்பற்றிய பகுப்பும் இரண்டே எனலாம். இவ்வாறே ஒவ்வொரு குறையுடைய ஊமுஞ் செவிடுங் குருடும் பிறவும்இவ்விருபாலுள்ளே அடங்குதலுங் காண்க. அவயவ வேற்றுமையான் இருதிறத்தினராய மானிடரே அறிவு வேற்றுமையான் மாக்கள், மக்களெனப்பட்டனராதலின், ஆண்பாலினும் மாக்களும் மக்களும் உண்டென்பதும் அவ்வாறே பெண்பாலினும் மாக்களும் மக்களும் உண்டென்பதும் அவர்க்குடன்பாடாம். இதனால் ஆசிரியர் எத்துணையறிவுண்மையும் அறிவின்மையும் ஆண்பாற்குடன்பட்டாரோ அத்துணையும் பெண்பாற்கும் உடன்பட்டாராதல் தெளியப்படும். களவியலுள் 'ஒத்த கிழவனுங் கிழவியுங் காண்ப' எனவுரைத்து, அத்தலைவற்கும் தலைவிக்குமுள்ள ஒப்புமைவகையினை விரித்தோதுவாராய், மெய்ப்பாட்டியலில்,

"பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே"

என்றாராதலின், ஆண்பாற்கொத்த ஆண்மையும், உணர்வும் பிறவும் பெண்பாற்கும் ஒக்குமென்பதும் உடன்பட்டனராவர். இதனுல் ஆண்மையும் அறிவும் ஆண்பாலார்க்கே சிறந்தன என்பது ஆசிரியர்க் குடன்பாடன்மை உணரப்படும். மற்றுக் களவியலுள் 'பெருமையு முரனு மாடூஉ மேன' என்றாராலெனின்;— அவர் பொருளியலுள்,

"செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பு
மறிவு மருமையும் பெண்பா லான"

எனக்கூறினாராதலான் ஆண்பாலினை உயர்த்துரைக்கு முகத்தாற் பெண்பாலினை இழித்தாரென்றல் பொருந்தாதாகும். செறிவாவது அடக்கம்: நிறைவாவது மறை புலப்படாமல் நிறுத்தும் உள்ளம்: செம்மையாவது மனக்கோட்டமின்மை: செப்பாவது செய்யத் தகுவன கூறுதல்: அறிவாவது நன்மை பயப்பனவும் தீமைபயப்பனவும் அறிதல்: அருமையாவது உள்ளக்கருத் தறிதலருமை: என்பர். இவ்வறுபெருங் குணங்களும் ஆண்பாற் கோதியபெருமை உரன் என்னுமிரண்டற்குஞ் சிறிதுந் தாழ்ந்தனவா காமை உய்த்துணர்க. மகளிர்க்கே சிறந்த சில இயற்கை வேற்றுமை யினை நன்குய்ந்து, ஆசிரியர், கிழவோள் பணிவும் கிழவோன் உயர்வும் உடன்பட்டனரல்லது வேறு எவ்வகை அறிவு வேற்றுமையும் உடன் படாமை கண்டு கொள்க. இதுவே தெய்வப்புலமைத் திருவள் ளுவனர்க்கும் கருத்தென்பது, அவர் 'அறிவறிந்த மக்கட்பேறு' 'நன் மக்கட்பேறு' 'பேதையார் கேண்மை' 'பேதையார் சொன்னேன்றல்' 'மடவார்ப்பொறை' என்னுமிடங்களில் ஆண்பெண் இருபாலார்க்கும் பொதுப்பட வழங்கிய பெயர்களானே ஆய்ந்தறியத்தக்கது. 'வகை தெரிவான் கட்டே யுலகு' என்பது முதலாக ஆண்பாலாற் கூறியன வெல்லாம் 'நஞ்சுண்டான் சாம்' என்புழிப்போல ஒருபாற்கிளவி யனைப்பாற் கண்ணுஞ் சேறற்குரிய என்பது பற்றித் தலைமையாற் கூறினாராவர். இனி வடநூலுளொருசாராசிரியர் மதம் பற்றிப்

பரிமேலழகர் பெண்பாலாரை ஆண்பாலாரோடொத்த அறிவெய்தற் குரியரல்லராகக்கொண்டு "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மக னைச், சான்றோ னெனக்கேட்ட தாய்" என்புழிப் 'பெண்ணியல்பாற் றானாக அறியாமையிற் கேட்டதாய் எனக் கூறினார்' என்றார். அவர் ஆடவருடைய அறிவொழுக்கங்களின் அருமையறிதற்கு முரியரல்ல ரெனக் கருதியமை காண்க. இங்கிலைய பெண்பாலார் பலருளரால் எனின், இங்கிலையஆண்பாலாரும் பலருளரென்க. தன் மகனென்னுந் தொடர்புபற்றியுளதாகும் அன்பு மேலீட்டாற் குணமுங் குற்றமும் நாடுமிடத்துக் குற்றந்தோன்றாது மறையினும் மறையும்: அவற்றை யுள்ளவாறாராய்ந்து குணமிகுதிகண்டு சான்றோரெனவல்லார் பிறரே யாதலானும், தானறிந்ததனோடொப்பத் தன்னையொத்தாரும் மிக்கா ரும் கூறியவழித்தான் தனக்கு மகிழ்ச்சியுளதாதலானும் 'கேட்டதா யென்றார்' எனக்கூறலாண்டைக்கியைபுடைத்தாம். பிறர்கூறியவழித் தன்னறிவு மாறுபடினும், தானறிந்தவழிப் பிறர்கூற்று மாறுபடினும் தனக்கு மகிழ்ச்சியின்றாதலுங் கண்டு கொள்க. "சான்றோரென்கை யீன்றோர்க்கின்பம்" என்பதூஉம் இக்கருத்தேபற்றி வந்தது. அவ் வடநூலுளொருசாரார் சூத்திரசாதியாரும் பெண்பாலாரும் வேதத் தின் சொல்வழக்கும் பொருளுணர்ச்சியும் மெய்யுணர்தலும் வீடும் எய்தப்பெறாரென்று கூறி அவரை அறியாமையுள்ளே நிறுத்துப. இஃதெல்லார்க்கு முடன்பாடன்று. பெரும்பாலார் வேதத்தை முறையே நியமிக்கப்பட்ட ஒலியுடனோதற்கண் சூத்திரசாதியாரை யும் பெண்பாலாரையும் விலக்குபவல்லது அதன் சொல்வழக்கி னும் பொருளுணர்ச்சியினும் மெய்யுணர்ந்துவீடுபெறுதலினும் விலக் கார். இதுவே இத்தமிழ்நாட்டுச் சிறந்த சைவவைணவ நல்லாசி யர் தொன்னெறி மரபாம். சைன பௌத்தரும் மெய்யுணர்ந்து வீடு பெறுதற்கண் மகளிரை விலக்காரென்பது அவரவர் நூல் களான் நோக்கித்தெளிக. அவருள் ஆரியாங்கனைகளும் பிக்குணி களும் எனத்துறவொழுக்கம்பூண்டு வீடுபேறு முயலும் பெண்பா லாரும் உளராதலறிந்துகொள்க.

இனி ஆண்மக்கள் காமத்தாற் கண்மயங்கிப் பிறனில் விழைந் தும் பெண்வழிச்சென்றும் வரைவின்மகளிர்ச்சேர்ந்தும் கேடுறாது

பாதுகாத்தற்கண், பெண்பாலைப்பழித்து ஆண்பாற்கறிவுறுத்துப. அங்ஙனம் வருமாறு.—

"பெண்ணி னாகிய பேரஞர் பூமியு
ளெண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
"புரிவளை முன்கைப் புனையிழை நல்லார்"
விரகில ரென்று விடுத்தனர் முன்னே"

"பெண்ணெனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
வுண்ணிறை யுடைய வல்ல வோராயிர மனத்த வாகு
மெண்ணிப்பத் தங்கை யிட்டா லிந்திரன் மகளு மாங்கே
வெண்ணெய்க்குன் றெரியுற் றாற்போன் மெலிந்துபின் னிற்குமன்றே

"அன்புநூ லாகவின்சொ லலர்தொடுத் தமைந்த காத
லின்பஞ்செய் காமச் சாந்திற் கைபுனைந் தேற்ற மாலை
நன்பகற் சூட்டி விள்ளா தொழுகினு நங்கை மார்க்குப்
பின்செலும் பிறர்க ணுள்ளம் பிணையனார்க் கடிய தன்றே"

"நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமத்தே"

என இவை முதலியன பலவாம். ஆண்மக்களை நோக்கிக் காம மாகாதென்றற்கட் பெண்மக்கள் பழிக்கப்படுதல்போல, ஆரியாங் கனைகள், பிக்குணிகள், கைம்மை நோன்பினர் முதலாய பெண்மக் களை நோக்கிக் காமமாகா தென்றற்கண் ஆண்மக்களும் இவ்வாறே பழிப்புரை பெறுதற்குரிய ரென்பது ஒருதலையாம். ஆணும் பெண் ணும் அறிவு மயங்கிக் காமவேட்கை மீதூர்ந்து ஒருவரொருவரைக் காமித்து முறைதப்பித் திரிதற்கட் பெண்ணால் எத்துணைக்கேடு ஆணுக்கெய்துமோ அத்துணையும்பெண்ணுக்கும்எய்துவதேயாகும். இங்ஙனமாகவும் ஒருவரொருவரைப் பழித்துரைப்பதெவ்வாறு. அவரவர் கேட்டிற்கு அவரவர் அறிவுஞ் செயலுங் காரணமாவனவே யன்றிப் பிறவில்லை. இக்கருத்துணர்ந்த நல்லோரெல்லாம் இருபா லார் நல்லொழுக்கமும் வேண்டுப.

ஆச லம்புரி யைம்பொறி வாளியுங்
காச லம்பு முலையவர் கண்ணெனும்

பூச லம்பு நெறியின் புறஞ்செலாக்
கோச லம்புனை யாற்றணி கூறுவாம்.

என்றார் கல்வியிற்பெரியாரும்.

நடுக்கடற் பிறந்த சங்கி னுள்ளிருந்த பாலினற்
குடிப்பி றந்த மைந்தர்தங் குழைமுகம் பிறர்மனை
யிடைக்கண் வைத்த லில்லைகாத லார்கண்மேலு மார்வமூர்
கடைக்கணேக் கிலாத மாதர் கற்பை யாவர் செப்புவார்.

என்றார் வாமனமுநிவரும்.

ஆண்மக்கள் கண்டபக்கமெல்லாம் பேராசையெழுவிக்கும் தம் பேய்மனத்தைப் பழியாமற் பெண்பாலாரையேபழிப்பது, குருடன் தன்கண்ணைப் பழியாமற் றன்னையிடறியவழியைப் பழித்தலையே யொக்கும். கொன்றுதின்பான் தனது தின்றல்வேட்கையே கொலைக்குக் காரணமென்னாது கொல்லுதற்றொழிற்குரிய கருவிகளும் கொல்லப்படும் யாடுமுதலியனவும் உண்மையே காரணமென்னும் இது அதுவேபோலுமென்க. அன்றியும் மண் பொன் பெண் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள் முன்னை இரண்டனையும் விழைந்து இவனடையுங்கேடெல்லாம் இவன் வேட்கை முதலியன காரணமாக விளைதல்போலப் பின்னதற்கும் ஆம் என்பது எளிதினுணரப்படும். காமம் ஒழியத்தக்கது என்னும் பொதுமொழிக்கண்ணும் ஆண்பாலார்க்குப் பெண்பாலார் பக்கத்துளதாகும் காமவேட்கையும் பெண்பாலார்க்கு ஆண்பாலார் பக்கத்துளதாகுங் காமவேட்கையுமே ஒழியத்தக்கன என்பதே பொருளாதலுங் கண்டுகொள்க. இனி வீடெய்தற்கட் காமமுதலியன ஒழியற்பாலவாதலால் ஆண்பாலார் பெண்பாலாரை விடுதற்கு எத்துணை அறிவொழுக்கங்களுடையராவரோ அத்துணையும் பெண்பாலார் ஆண்பாலாரை விடுதற்கும் வேண்டுவரென்பது. நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே என்பார்க்கு நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தம்முண்மையறிவே மிக்காகும்; ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தாமடங்காப் பேதையாரும் ஆண்மக்களுள்ளும் பலருளராவராதலால் அப்பேதைமை மகளிர்க்கே சிறந்ததில்லை என்று கூறுக. இவையெல்லாம் வடித்தாராய்ந்தே வடகலை தென்கலைக் கடனிலை கண்ட ஆசிரியர் தொல்காப்பியனார் ஆண் பெண் இருபாலார்க்கும் அறிவொப்புமை கூறியமட்டிலமை

யாது 'கிழவனுங் கிழத்தியுஞ் சிறந்தது பயிற்ற லிறந்ததன்பயனே' என்பதனால் வீடுபெறுதற் கேமஞ்சான்றவற்றை இருபாலாரும் புரிதற்குடன்பட்டனரெனவுணர்க. சிறந்தது, சிறப்பு, சிரேயசு என்பன வீட்டின் பெயராம். இத்தொல்காப்பிய நன்னெறி கடைப்பிடித்தொழுகிய பண்டைத் தமிழ்மக்களெல்லாம் ஆண் பெண் இருதிறத்தாரையும் நற்றமிழ்க் கல்வியினும் அற்றமிலறிவினும் குற்றமிலொழுக்கினும் வேற்றுமையின்றிப் பயில்வித்தனராவர். இத்தகைப் பயிற்சி ஒத்திலையாயின் மூன்றுவகைச் சங்கத்து நான்குவருணத்தொடுபட்ட சான்றோருள்ளும் சைவ வைணவ மெய்யடியருள்ளும் உத்தமக் கல்வி வித்தகர்போற்றும் நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் பலரை யாம் பெற்றுய்யுமாறெங்ஙனம்? பெண்டிரெல்லாம் அறிவு நிரம்புதல் தண்டமிழ் வரைப்பிற் பண்டே நிகழ்ந்தது என்பதனை கோப்பெருஞ்சோழற்கு உயிர்த்துணைவராகிய பிசிராந்தையார் என்னும் புலவர் பெருந்தகையார், யாண்டுபலவாகவும் தமக்கு நரையிலவாதற்குக் காரணமாகத் தம்மனைவியும் மக்களும் அறிவுநிரம்பினராயிருத்தலைக் கூறியதனானும் அறியலாகும். "இல்லதெ னில்லவண் மாண்பானல்" என்பதனையும் நோக்கிக்கொள்க. இனி ஒருசாராசிரியர் பெண்பாலார்க்கு யாழ்முதலிய சில கலைகளே கூறுவர். இவ்வாறு "கலைமலிகாரிகை" எனவருந் திருச்சிற்றம்பலக்கோவைக்கும் "கலைவலார்" என்னுஞ் சிந்தாமணிக்கும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறிய உரைநோக்கித் தெளிக. மகளிராற் பயிலப்படும் யாழ்முதலியன ஆண்மக்களானும் பயிலப்படுமாறுபோல, ஆண்மக்களாற் பயிலப்படுவனவும் மகளிராற் பயிலப்படுமென்றுணர்க; பெண்பாற்கோதிய மடைநூற்செய்தி ஆண்பாலாராலும் பயின்று செய்யப்படுதல்போலக் கொள்க. நளன் வீமன் என்னும் ஆண்பால் நன்மக்கள் மடைத்தொழில் வல்லுநராதலுங் காண்க. இவ்வேற்றுமையின்மையானன்றே மகளிர்க்கோதிய யாழ் முதலியவற்றிற் றேர்ச்சிமிக்க நல்லாண்மக்களும், இயற்றமிழறிவிற் சிறந்த நல்லிசைப்புலமை மெல்லியலாரும் இத்தமிழ்நாட்டுப்பலராயினரென்பது. வீடுபயக்கும் விழுப்பேருணர்வைக் கொள்ளும் வாயெல்லாங் கொளுத்தியது இப்பழைய தமிழ்நாடே. ஆண் பெண் என்னும் வேற்றுமையின்றிப் பிறப்பினிழிபுகருதாது கடைநிலத்தோராயினுங் கற்றறிந்தோரைத் தலைநிலத்து

வைத்து மகிழ்ந்தது தண்டமிழ்வரைப்பே. குலத்தினும் பாலினும் குடியினுந் தொழிலினும் கொள்கையினும் பல்வேறு வகைப்பட்ட நன்மக்களும் இகலிலராய் ஒருங்குகுழீஇ அறிவான் மகிழ்ந்தது இவ் வருந்தமிழ் நிலமே. நன்மக்களெங்கே பிறந்தாலுமென் என்று அறி வின்பெருமையும் அன்பின்அருமையுமேகருதிப் பெண்டிரும் பிறப் பினிழிந்தாரும் உரைத்தருளிய நன்மொழியனைத்தையும் வேதமென ப்போற்றிப் புகழ்ந்து அவரது அன்புருவாய இன்புறுவடிவைத்திரு க்கோயிலில் வைத்து வழிபடுவதும் இத்தென்றமிழ்ப்பொழிலே. எக் குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை வருக வென்றழைத்த திவ்வண்டமிழுலகே. ஆண்மையில்லென்பார் நாண் கொளமுன்னே எண்டிசைவென்று பெண்டரசாண்டதிவ் வொண்ட மிழகமே. இவையெல்லாம் நன்காராயினித்தமிழர் ஆண் பெண் இரு பாலார்க்கும் அவயவவேற்றுமையல்லது அறிவுவேற்றுமை சிறிதுங் கருதினாராகார் என்பது தெளிவாம். இக்கூறியவற்றிற்கெல்லாம் சா ன்றெனச் சிறந்த இத்தமிழ்நாட்டு நல்லிசைப் புலமை மெல்லியலா ரைப்பற்றி யானறியளவை யீண்டெடுத்தோதலுற்றேன். அவர் :—

| | |
|---|---|
| ஆதிமந்தியார் | குறமகள் இளவெயினி |
| வெள்ளிவீதியார் | பேய்மகள் இளவெயினி |
| ஔவையார் | காவற்பெண்டு |
| பாரிமகளிர் | காரைக்காற்பேயம்மையார் |
| பூதப்பாண்டியன்றேவியார் | வில்லிபுத்தூர்க்கோதையார் |

எனப்பலராவர்.

ஆதிமந்தியார்—இவர் பெண்பாலர்என்பதும், இவர் நல்லிசைப்புல மை வாய்ந்தவர் என்பதும் "மக்க ணுதலிய வகனைந் திணையுஞ், சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்' என்னும் அகத்திணை யியற் சூத்திரவுரையில் நச்சினர்க்கினியர்,

" மள்ளர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்

கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
நாடுகெழு குரிசிலு மாடுகள மகனே.

(குறுந்தொகை—நுக)

என்னும் பாடலை எடுத்தோதி 'இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு' எனவுரைத்தமையானும், இச்செய்யுள் சான்றோராற்றொகுக்கப்பட்ட குறுந்தொகையுளொன்றாதலானும் அறியப்படும். இதனுட் காதலற்கெடுத்த என்றது நாயகனைக் காணப்பெறாத என்றவாறு. ஈண்டுக்கெடுத்தளென்பதனை 'அரசுகெடுத்தலமருமல்லற்காலை' (சிலப்-அந்தி) 'எற்கெடுத்திரங்கி' (மணி-டு) 'யானைதன் வயப்பிடி கெடுத்து மாழாந்த தொத்து' (சிந், கன-நுச) "ஒருபொற் பூங்கொடியென்னு நீரானை யிங்கே கெடுத்தேன்" (ஷெ, ஷெ, நுஅ) என்னுமிடங்களிற் போலக்கொள்க. இவர் காதலனைக் காணப்பெறாதவாறென்னையெனிற் கூறுவேன். இவர் திருமாவளவ னெனச்சிறந்த கரிகாற்சோழன் அருமை மகளார். சேரநாட்டு ஓர் மன்னனாகிய ஆட்டனத்தி என்பானை மணந்தவர். இவர் தங்காதலனுடன், கரிகாற்சோழனூற் கழாஅர் என்னுமூரிற் காவிரி முன்றுறையிற் சிறப்பித்துக்கொண்டாடப்பட்ட புதுப்புனல் விழவுக்குச் சென்றாராக, ஆங்குக் கச்சினன் கழலினன் தேந்தார்மார்பினனாய் இயற்கை வனப்பாலும் செயற்கையணியாலும் கண்டாரெல்லாம் விரும்புந் தகையனாய் யாரினு மேம்பட்டு ஆடுதற் றொழிலாற் சிறந்த தம்முயிர்க்காதலனாகிய அவ் வாட்டனத்தியை நீர்விளையாடுகையிற் காவிரி வவ்வியதனால், அவனை நாட்டினும் ஊரினும் சேரியினும் வீரர் தொக்க வில்விழவுகளிலும் மகளிர் தொக்க துணங்கையா டிடங்களிலும் யாண்டுந் தேடிக் காணப்பெறாது, புனல் கொண்டொளித்ததோ கடல்கொண்டுபுக்கதோ என்று கலுழ்ந்த கண்ணராய் மருண்டசிந்தையராய் அலமந்து அக்காவிரி ஓடும் வழியெல்லாம்ஓடிக் கடல்வாய்ப்புக்கு அவனையே கூவியாற்றினார்க்கு, அக்கடலே அவ்வாட்டனத்தியைக் கொணர்ந்துவந்து முன்னிறுத்திக் காட்டியவளவில் ஆங்கவனைத் தழுவிக்கொண்டு பொற்கொடிபோலப் போந்தார் என்ப. இதனாற் காதலற்கெடுத்தவாறுணர்க. இவ்வரியகதை நெடுந்தொகையினும் சிலப்பதிகாரத்தும் எடுத்தாளப்பட்டுள்ளது. இது பரணர் முதலிய நல்லிசைப்புலவரால் ஆங்காங்கெடு

த்துப் பாராட்டப்படுவது. தலைவர் பிரிவுக்குத் தலைவியர் வருந்துமிடனெல்லாம் இவ்வாதிமந்தியார்க்கு நேர்ந்த பெருந்துயரே எடுத்துவமைகூறப்படுவது. இக்கதையோடொட்டி ஆராயுமிடத்து மேற்குறித்த பாடல் இவரது பெருந்துயர்நிலையிலுரைத்த தென்பதும், தம்முடைய நாயகன் நாடுகெழுகுரிசிலாகிய மாண்டக்கோனென்பதும், அவன்மைந்தர்க்கு மைந்தராய் மகளிர்க்குச் சாயலாய் இருபாலாராலும் விரும்பப்படுபவனுதலால், மைந்தர் வில்விழவாடிடங்களிலும் மகளிர்துணங்கையாடிடங்களிலும் மற்றுமவன் இருத்தற்குத் தக்குழியெல்லாந்தேடிக் காணாதுழன்று ரென்பதும், வில்விழவாடுகளத்தும் துணங்கையாடுகளத்தும் அவனைத்தேடுதல் காரணமாகப் பல்காற் சுற்றித்திரிதலாற் றமும் ஆடுகளமகளே போறலின் 'யானுமோராடுகளமகளே' என்றாரென்பதும், தங்கணவன் ஆடுதற் றொழிலிற் சிறந்தோன் என்பதும், அவனைக் காணாமையாற் றம்மேனி பெரிதுமெலிந்தார் என்பதும் தெளியப்படுதல் காண்க. இவர் தங்கணவன் யாவரும் விரும்பும் பேரழகுடையனுதலாற் காவிரி அவனது நலனயந்து வவ்விய தென்று சிறப்பித்துக் கூறுவர். இவர் பெயரும் இவரது காதலன் பெயரும் சிறுபான்மை முதற் சொல்லொழித்து மந்தி எனவும் அத்தி எனவும் வழங்கவும்படும். இவற்றையெல்லாம்,

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாதிமந்தி போலப் பேதுற்
றலந்தன னுழல்வேன் கொல்லோ" (வெள்ளி வீதியார். அகம்-சரு)

"கச்சினன் கழலினன் றேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காண்டி ரோவென
வாதி மந்தி பேதுற் றினையச்
சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகு
மந்தண் காவிரி போல" (பரணர். ஷை, எசூ)

"கழாஅர்ப் பெருந்துறை விழவி னாடி
மீட்டெழிற் பொலிந்த வேந்துகுவவு மொய்ம்பி
னாட்ட னத்தி நலனயந் துரைஇத்
தாழிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின்

மாதிரந் துழைஇமதி மருண்டிட ருழந்த
வாதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதி யன்ன மாண்புகழ் பெறீஇயர்" (பரணர். ஷை, ௨௨௨)

"அணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி னொடுங்கிய விருக்கை
யறியா மையி னழிந்த நெஞ்சி
னேற்றிய லெழினடைப் பொலிந்த முன்பிற்
றோட்டிருஞ் சுரியன் மணந்த பித்தை
யாட்ட னத்தியைக் காணீரோ வென
நாட்டி னாட்டி னூரி னூரிற்
கடல்கொண் டன்றெனப் புனல்கொண் டன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுத்த
வாதி மந்தி" (பரணர். ஷை, ௨௱௬.)

... ... ... உரைசான்ற

"மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
றன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவி றோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட வவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்"

(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை)

என்பனவற்றான் ஆராய்ந்து கொள்க. நெடுந்தொகை சக-ஆம் பாட்டில் நன்னன் ஏறை நறும்பூணத்தி முதலிய சிலர் சேரன் படைத்தலைவராகக் கூறப்படுதலால் அத்தியை வஞ்சிக்கோனென் றலும்பொருந்தும். கரிகால்வளவன் புதுப்புனல் விழவு கொண்டா டுதல் சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையினுங் கண்டது. 'விண் பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன், றண்பதங் கொள்ளுந் தலைநாட் போல' என்பத னுரையானுணர்க. அறிவாற் கலைமகளே எனச்சிறந்த ஔவையார் பாடியருளிய 'நெடுமலைச் சிலம்பின்' என்னும் நெடுந்தொகையில் "வெள்ளி வீதியைப்போல நன்றுஞ் செல வயர்ந்திசினால் யானே" எனவருதலானே, வெள்ளிவீதியார் ஔவை யாரின் முற்பட்டவராதல் அறியப்படுவது. அவ்வெள்ளி வீதியார் "ஆதி மந்தி போலப் பேதுற், றலந்தனெ னுழல்வேன் கொல்லோ"

(ஷ, சரு) என்றமையானே இவ்வாதிமந்தியார் அவர்க்கும் முற்பட்டவராதல் தெளியப்படும். செந்தமிழ்ச்சரிதவாராய்ச்சி செவ்விதிற் புரிந்த இக்காலத்தறிஞர் * கரிகாற்சோழன் காலம் கி. பி. 55 முதல் 95 இறுதியாமெனத் தெளிவித்தலால், இவ்வாதிமந்தியாரும் அவன்மகளெனல் பற்றி அக்காலத்தவரேயாதல் தெரிந்து கொள்க. இவரது நுண்ணிய அறிவும் திண்ணியகற்பும் இவற்றானுருவாறறியத்தக்கது. இனி அடுத்த பகுதியில் வெள்ளி வீதியாரைப்பற்றி ஓதுவேன்.

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

---

௳

# ஆராய்ச்சி.

"ஈட்டு மகத்திணையு மேய்ந்த புறத்திணையுங்
காட்டு களவியலுங் கற்பியலு—மீட்டும்
பொருளியன்மெய்ப் பாடுவமம் போற்றிய செய்யுண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு."

"பூமலர்மென் கூந்தால் பொருளியலிற் சூத்திரங்க
ளாவவறு நூற்றறுபத் தைந்தாகு—மூவகையா
லாயிரத்தின் மேலு மறுநூற் றொருபதென்ப
பாயிரத்தொல் காப்பியங்கற் பார்."

இவ்விரண்டு வெண்பாக்களும் இச்சங்கத்திற்குக் கிடைத்த பழையதோர் தொல்காப்பியவேட்டினிறுதியிலெழுதப்பட்டிருந்தன. இவற்றாற் பொருளதிகாரச் சூத்திரங்கள் ௬௬௫ எனவும், தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் ௲௬௱௰ எனவும் விளங்குகின்றன; இக்காலத்துப் பொருளதிகாரச் சூத்திரங்கள் ௬௬௬-ஆகவும்

---

* மகா-ா-ா-ஸ்ரீ வி. கனகசபைப் பிள்ளையவர்களுடைய Tamils eighteen hundred years ago, Madras Review, page. 433.

தொல்காப்பிய முழுதுக்குமுள்ள சூத்திரங்கள் ௲௬௧௨ ஆகவும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வேற்றுமை உரைகாரர்கள் இரண்டு சூத்திரங்களை ஒரு சூத்திரமாக்கியும் ஒரு சூத்திரத்தை இரண்டுசூத்திரமாக்கியும் பொருள் கொள்ளுதலாற் போந்ததாகும். இதுகாறும் வெளிவராத தொல்காப்பியச் செய்யுளியற் பழையவுரை யொன்று இச்சங்கத்திற்கியான் ஏடுதேடிச்சென்றபோது கிடைத்தது. அதனையுற்றுநோக்கின் இத்தகைய வேற்றுமை பெரிதும் புலனாவது. அவ்வுரை பேராசிரியர், நச்சினார்க்கினியருரைகளின் வேறாகும். இவ்விரண்டாசிரியர்களாலும் குறிக்கப்பட்ட பாடபேதங்கள் அப்பழையவுரைக்கண்ணே காணப்படுகின்றன. "துகளொடும் பொருளொடும்" என்னும் சூத்திரவுரையிற் பேராசிரியர் "இனிப் புகழொடும் பொருளொடும் என்பதூஉம் பாடமாக வுரைப்ப; புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃதமையும்: மற்று அன்றாயின் ஈண்டாராய்ச்சியின்றென்பது; என்னை? 'வசையொடு நசையொடும் புணர்ந்தன்றாயினங்கதச்செய்யுள்' என மேலோதுமாதலினிவன் என்பது" எனவும், நச்சினார்க்கினியர் "புகழொடும் பொருளொடுமென்று பாட. மோதின் மேல்வசையொடு நசையொடு மென்பது பொருந்தாதாம்" எனவும் கூறுதலாற் கருதிய 'புகழொடும் பொருளொடும்' என்ற பாடமே அவ்வுரையேட்டிற் காணப்படுவது. இக்காலத்து வழங்காத அரிய வுதாரணச்செய்யுள்கள் பல அதன்கண்ணுள்ளன. அவற்றுட் பரிபாடற் செய்யுட்கள் சிலவாம். கபிலதேவநாயனார் அருளிச்செய்த 'மூத்தநாயனார்திருவிரட்டைமணிமாலை' யினின்று 'கனியினைவொடு' 'நல்லார் பழிப்பில்' என்னும் முதல்களையுடைய இரண்டு கலித்துறைகளும் அதன்கண் எடுத்தாளப்பட்டுள்ளன. "சேரிமொழியாற் செவ்வி திற்கிளந், தோதல் வேண்டாதுகுறித்ததுதோன்றிற், புலனென மொழிப புலனுணர்ந் தோரே" என்னுஞ் சூத்திரம் "தெரிந்த மொழியாற் செவ்வி திற்கிளந்து, தேர்தல் வேண்டாதுகுறித்தது தோன்றிற், புலனெனமொழிப புலனுணர்ந்தோரே' எனப்பெரிதும் பாடம் வேறுபட்டுள்ளது. இவ்வுரை 'செந்தமிழ்' வாயிலாக வெளிவரும்.

அன்றியும் "பாட்டுரைநூலே" (எக) என்னுஞ் சூத்திரத்து 'வண்புகழ் மூவர்' என்பதற்கு 'வளவிய புகழையுடைய சேரன்

பாண்டியன் சோழன் என்னும் மூவர்' எனக்கூறியவுரைக்கண் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலாயோர் வழங்கிய சேர சோழ பாண்டியர் என்னும் முறைவைப்புக்காணப்படாமல் சேரன் பாண்டியன் சோழன் என்னும் முறைவைப்பே காணப்படுவது. ஆசிரியர் தொல்காப்பியனார் புறத்திணையியலில் "வேந்திடை தெரிதல் வேண்டி யேந்துபுகழ்ப், போந்தை வேம்பே யாரேனவரூஉ, மாபெருந் தானையர் மலைந்த பூவும்" என்புழிச்சேரர்க்குரிய போந்தையினை முன்னும் பாண்டியற்குரிய வேம்பினை இடையினும் சோழற்குரிய ஆரினை இறுதியினும் வைத்து வழங்கியவாற்றால், அவர்க்கும் சேரன் பாண்டியன் சோழன் என்னும்முறைவைப்பே கருத்தாதல் நோக்கி இவ்வுரைகாரரும் சேரன் பாண்டியன் சோழன் எனவே வழங்கினாராவர். சிறுபாணாற்றுப்படையுள்ளும்,

"குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே, யதாஅன்று
தென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே, யதாஅன்று
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே"

என இம்முறைவைப்பே கூறப்பட்டமையுங் காண்க. இனிப் புறப்பாட்டும் பெரும்பான்மையும் இம்முறைவைப்பே கொண்டு சேரர்பாட்டு பாண்டியர்பாட்டு சோழர்பாட்டெனத் தொகுக்கப்பட்டிருத்தலுங் காண்க. இவையன்றி "வெண்டளை விரவியும்" என்னுஞ் சூத்திர வுரையில் அதியமான் நெடுமானஞ்சியை ஔவையார் பாடியருளிய "சிறியகட்பெறினே" என்னும் புறப்பாட்டை எடுத்தோதி 'இப்பதினேழடி யாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டா

மடியும் முச்சீரான்வந்தன: மூன்றுமடிமுதலாக ஆறுமடியீறுகிய நான்கடியும் பதினுலாமடியும் ஐஞ்சீரான்வந்தன: இரண்டாமடியும்பதினென்றுமடியும் அறுசீரான் வந்தன: ஏனைய நான்குசீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியமாயிற்று" எனக்கூறுதலானே அப்புறப்பாட்டுப்பதினேழடியான்வந்த அடிமயங்காசிரியம் என்பதும் அறியப்படும். இன்னும் அவ்வுரை கொண்டு அறியக்கிடப்பன பலவாம். இவற்றன் அவ்வுரையின் பழைமை ஆராயத்தக்கது.

ரா. இராகவையங்கார்.

உ

# தமிழே அநேக பாஷைகளுக்கு இலக்கங் கொடுத்தது.

தென்னடும் அதன்மொழியாகிய தமிழும் பல்லாயிரம் வருஷங்களுக்குமுன்னே பல்வகைவளமும் பல்வகைச் சிறப்பும் வாய்ந்தனவாய், ஏனைய நாடுகளையும் ஏனைய மொழிகளையும் மங்குவித்து விளங்கின வென்பது யாவருமறிந்த வுண்மையாம். அந்நாள் எந்நாட்டினரும் தந்நாட்டிற்கு வேண்டும் பண்டங்களையெல்லாம் தென்னட்டில் வந்து கொள்வாராவர். வாணிகத்தின் பொருட்டும், இராஜசேவை, காருகம்மிய முதலியவற்றின் பொருட்டும் யவனர் முதலிய தூரதேசவாசிகளும் வந்து தென்னட்டிற் குடிகொள்வாராயினரென்பது,

"பயனற வறியா யவன ரிருக்கையுங்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்"

என்னுஞ் சிலப்பதிகாரக் கூற்றுலினிது பெறப்படும். தூரதேசவாசிகளாகிய யவனர் முதலியோர் தாம் கொள்ளும்பண்டங்களைப் பொதிசெய்து அப்பொதிகளின்மேலே தம்பெயரையும் அளவையும் நிறையையும் எண்ணையும் இடுவித்துப் பண்டசாலைகளிலே அடுக்கிவைத்துப் பின்னர் மரக்கலங்கள் மீளும்போது அவற்றிடையேற்றி யேகுவர்; இவ்வுண்மை,

"வம்ப மாக்க டம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பலபொதி
கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்"

எனவருஞ் சிலப்பதிகாரத்தாற் றுணியப்படும். இங்ஙனந் தூரதேசங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பண்டப்பொதிகளே அவ்வத்தேசத்தார்க்கெல்லாம் தமிழிலக்கங்களைப்பயிற்றுவனவாயின. இதுவே அராபிய ஐரோப்பிய தேசங்களுக்குத் தமிழிலக்கஞ் சென்றவழியாம்.

தமிழர் வாணிகம் காருகம் முதலிய வெண்ணில்பல முயற்சித்துறைகளெல்லாம் வல்லுநராய் அவற்றாற்பெரும்பொருளீட்டி வாழ்பவராதலின் அவர்க்குச்சொற்குறி, எண்ணுக்குறி, அளவுக்குறி, நிறைக்குறி முதலியன இன்றியமையாதனவாயின. எழுத்துப்பல்குதலால் காலக்கேடும் அதனுல் வினைக்கேடும் உளவாமாதலின் எழுத்துப் பல்காமைப்பொருட்டுச் சிலசொற்களுக்கும் அளவுநிறைஎண்களுக்கும் சங்கேதத்தாற் குறிகளை ஆக்கி வழங்குவாராயினர். இதுவே எண்ணுக்குறியாகிய இலக்கம் வந்தமைக்குக் காரணமாம்.

இனி எண்களின் குறிவரலாறு யாதெனவாராயுமிடத்துக் கைவிரல்களே அதற்கு மூலாதாரமாம். ஒன்றன்குறி ஒருவிரல், இரண்டன்குறி இருவிரல். இவ்வாறே ஏனையவுமாம்: * ஒன்றற்கு எழுத்துக்குறி ஒருகோடும், இரண்டற்கு இருகோடும், மூன்றற்கு மூன்றுகோடும், நான்கற்கு இருகோட்டைக் குறுக்கே கோடிட்டு நான்காக்கிய கோடும், ஐந்தற்குப் பத்தின்பாதி என்னும் குறிப்பினையுணர்த்தும் நடுவே கோடிட்டு வகிர்ந்த புள்ளியும், ஆறுக்குச் சதுரத்தோடு மேல்நோக்கி யிழுத்த இருகோட்டொரு கோணக்கோடும், ஏழுக்கு ஒரு சதுரமும் அதன்பக்கத்தே யிழுத்த முக்கோட்டிரு கோணக்கோடும், எட்டுக்கு இருசதுரமாக வரைந்த எண்கோடும், ஒன்பதுக்கு ஒருபுள்ளியும் வலப்பக்கத்தே ஒருகோடும், பத்திற்குப் புள்ளியுமாம்.

எண்கள் எழுத்தாலும் குறியாலும் சங்கேதச் சொற்களாலும் வழங்கப்படும். ஒன்றை ஒன்று எனவெழுதுதல், எழுத்து வழ

---

* இவ்வழக்குப் பண்டுதொட்டதென்பது:— (வில்லிப்புத்தூரர் பாரதம்) "மண்மிசைநால் விரனிற்கு மணிமகுடத் தணியரங்கின்" என்பதனுற் பெறப்படும்.

க்கு. ஒன்றை ‘க’ இவ்விலக்கத்தால் வழங்குதல் குறிவழக்கு. ஒன்றைத் தெய்வமென்னுஞ் சொல்லால் வழங்குதல் சங்கேத வழக்கு. பாஷைகளெல்லாம் ஆதியில் எண்ணுப்பெயர்களை அவ்வச்சொல்லால் எழுதி வழங்கின. அவற்றுள் வடமொழிமாத்திரம் சொல்லினாலும் சங்கேதமொழிகளாலும் வழங்குவதாயிற்று.

இங்ஙனமாகத் தமிழொன்றுமே ஏனைய பாஷைகள் எண்ணுப் பெயர்களுக்குக் குறிசெய்து வழங்குமுன்னர்த்தான் குறிசெய்து வழங்கத்தொடங்கிற்று. அதுபற்றியே குறிவழக்கில்லாத பாஷைகளெல்லாம் தமிழ்க்குறியைக் கவர்ந்து வழங்கத்தலைப்பட்டனவாம்.

தமிழ் எண்ணுப்பெயர்ச்சொல்லெல்லாம் தமிழ்ச்சொல்லேயாமன்றி வடமொழிச்சொல்லல்ல. அவற்றுள் ஒன்பது என்பது ஒன்றொழிபத்து எனப்பொருள்படும். அப்பொருட்குறிப்பு ஒன்பதன் குறியின் பூர்வ வடிவாகிய “01” இதனால் இனிது புலப்படும்.

தமிழ் இலக்கங்களின் ஆதி வடிவமும், அவை காலந்தோறும் எழுதுவோரது கரவேகத்தால் வடிவந்திரிந்ததும், அவை பிறபாஷைக்குட்சென்று வழங்கும் வடிவமும் வருமாறு:—



| | ஆதிவடிவு. / காலந்தோறும் பலபடத்திரிந்த வடிவு. | | பிறபாஷைக்கண் வழங்கும் வடிவு. |
|---|---|---|---|
| ஒன்று | | ......க | 1 |
| இரண்டு | | ......உ | 2 |
| மூன்று | | ......ங | 3 |
| நான்கு | | ......ச | 4 |
| ஐந்து | | ......ரு | 5 |
| ஆறு | | ......சு | 6 |
| ஏழு | | ......எ | 7 |
| எட்டு | | ......அ | 8 |
| ஒன்பது | | ......கூ | 9 |
| பத்து | | ......ய | 10 |

இவற்றுள், பத்தின்குறியாகிய புள்ளியோடு ஒருபது என்ப தைக் குறித்தற்கு இடப்புறத்தே ஒன்றன்குறியாகிய 1 இதனை இடு தலுமுண்டு. அதனால் பத்தின் புள்ளிக்குறியகரம்போலத் திரிந்த தெனக் கொள்ளினும் அமையும். பத்திற்குப் புள்ளிவந்தது யாது பற்றியோவெனின், அஃது இருகையையும் ஒருங்கே குவித்த வடிவ த்தின் குறியாம்.

அங்கியதேச வணிகரால் தமிழிலக்கமாத்திரமன்று தமிழ்ச்சொ ற்களும் சிலகொண்டுபோய்த் தத்தந் தேச பாஷைகளிற் கலக்கப்பட் டனவென்பது கிறிஸ்தமத நூலுக்கு மூலபாஷையாகிய "ஹிபுரு" பாஷையில்வரும் தோகை முதலிய தமிழ்ச்சொற்களாலும், பிளினி "ஸ்ட்ராபன்" "டொலமி" (Pline, strabon, Ptolemee) முதலி யோர் கிரேக்க பாஷையிலெழுதிய நூல்களிலே வரும் கருவூர், மது ரை, பாண்டி, சோழம், சேரம், கோட்டாறு, கள்ளி, மயிலாப்பூர் உறையூர் என்னுந் தமிழ்ச் சொற்களாலும் நன்கு துணியப்படும்.

தமிழிலக்கங்களை முதலிற் கொண்டுசென்று தம்பாஷையோடு கலந்து வழங்கிய யவனர் அராபியர். அவர்பால் ஐரோப்பிய யவன ரெல்லாம் அவைகளைக் கவர்ந்தார்கள். தமிழிலக்கம் தன்சுவய ரூபம் பெரிதுந்திரிய முந்தியகாலத்திலேயே அராபியர் தமிழிலக்கத்தைக் கவர்ந்தாராகற்பாலர். விட்டுவிட்டு எழுதுதற்குரிய வெழுத்துக்களைக் கைதூக்காது ஒரு தொடையாகக் கூட்டியெழுதும் கருணீகரது கர வேகமே தமிழிலக்கங்களைக் காலந்தோறும் ஆதிவடிவிற்றிரிந்து வே றும்பிறவெனச் செய்ததாம். தமிழிலக்கங்கள் மாத்திரமன்று தமி ழெழுத்துக்களும் எழுதுவோரது கரவேகமும் எழுத்தாணிச் சுழற் சியும் காரணமாகப் பண்டைவடிவம் திரிந்துவிட்டனவன்றே.

ஆங்கிலமுதலிய ஐரோப்பிய இலக்கங்கள் தமிழிலக்கங்களே யாமென்பதற்கு அவற்றின் வடிவமும் அப்பாஷைகளின் எழுத்தின் வடிவமும் தம்முட் பொருந்துவனவாகாது வேற்றினமாய்ப் பிரிந்து காட்டலும், அவ்விலக்கங்களின் வடிவம் தமிழ் எழுத்துக்களோடு நன்குபொருந்தி ஓரினமாதலும் பிரத்தியக்ஷப் பிரமாணமாம். தமி ழெழுத்துக்களெல்லாம் புள்ளியும் கோடுமாகிய ஈருறுப்பால் எழுதப்

படுவன. புள்ளியின் மிகுதிபற்றித் தமிழெழுத்துக்களை வட்டெழுத்து எனவும் வழங்குப.

இன்னும் தமிழிலக்கங்கள் வேறுபாஷை யிலக்கமல்லவென்பதும் அவை தமிழுக்கே உரியனவென்பதும் அவற்றுள் எட்டுக்கும் இரண்டுக்கும் வடிவம் முறையே அகரத்தின் வடிவமும் உகரத்தின் வடிவமும் போலும் என்னுங் குறிப்பினையுடைய மேல்வருந் திருமந்திரச் செய்யுளாற் றுணியப்படும்.

"எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே."

இதுகாறுமெடுத்துக்காட்டிய வேதுக்களால் தமிழே அநேக பாஷைகளுக்கு இலக்கங்கொடுத்ததென்பதும் ஐரோப்பிய இலக்கங்கள் தமிழிலக்கங்களேயாமென்பதும் சித்தாந்தமாம்.

யாழ்ப்பாணம்.
23—4—04

இங்ஙனம்,
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

உ

# உபசருக்கம்.

செந்தமிழ் நூல்களிலே வந்து வழங்கும் ஆரிய மொழிகளுள்ளே உபசர்க்கங்களோடும் ஒட்டிநிற்பனவாகக் காணப்படுஞ் சொற்களும் பற்பலவாகும். அவை, அதிவேகம், அநுபவம், அபிமானம் அவமானம், ஆபாதசூடம், பரிபாலனம், பராமுகம் முதலியன. அவைகளை அப்பியாசஞ் செய்வார்க்கு அநுகூலமாக உபசர்க்கம் என்னும் உபக்கிரமத்தோடு இங்கே சில எழுதப்படுகின்றன.

சிலசொற்களின் முன் சேர்ந்து நின்று அவற்றின் பொருள்களை வேறுபடுத்தியாவது விசேடப்படுத்தியாவது வருகின்ற பிரமுத

லியவைகளே உபசர்க்கம் எனப்படும். இலகுகௌமுதிகாரரும் "உவஸமூ்ஃ க்ரியாயோமே" என்றார். உரைகாரரும் வினைக்கு முன்வரும் பிரமுதலியன உபசர்க்கம் எனப்படும் என்றார். உபசர்க்கமொழியையுந் தமிழ்நூலார் இடைச்சொல் என்பர். பரிமேலழகரும் "மதிநுட்பம்" என்னுங் குறளுரையிலே "அதி யென்பது மிகுதிப் பொருளதோ ரிடைச்சொல்" என்றார்.

பிர முதலியன யாவையெனில், பிர, பரா, அப, சம், அநு, அவ நிஸ், நிர், துஸ், துர், வி, ஆங், நி, (ஸுபி) அதி, அபி, அதி, சு, உத், [ஸுஹி] அபி, பிரதி, பரி, உப என்பவைகளே பிரமுதலியனவாம். இவற்றுள்ளே நிஸ், துஸ், என்பவைகளை நீக்கி இருபதாக்கொள்வாருமுளர். இவைகளொவ்வொன்றும் பலபொருளுடையன. சிலபொருள்கள் இங்கே எழுதப்படுகின்றன.

பிர - பிரதானம், மிகுதி, எதிர்.
பரா - பின், எதிர், அதிகம், முரிதல்.
அப - எதிர், அப்பால், பிரிவு, தள்ளல்.
சம் - சுகம், நன்மை, அழகு.
அநு - பின், கூட, வரிசை, ஒப்பு.
அவ - கீழ், தள்ளுதல், தீங்கு, கேடு.
நிர் - நிச்சயம், விலக்கு, வெளியாதல்.
துர் - நிந்தை, துக்கம், விலக்கு.
வி - விலக்கு, பிரிவு, விசேடநிச்சயம், அற்பம்.
ஆ - அற்பம், எதிர், எல்லை, நிறைவு.
நி - அதிகம், சமீபம், நிச்சயம், எதிர்.
ஸுபி — அதிசயம், மேன்மை, மேல், அதிகாரம்.
அபி - ஐயம், நிந்தை, பின்.
அதி - அதிகம், கடத்தல், அதிசயம்.
சு - மேன்மை, அதிகம், அதிசயம்.
உத் - மேல், அதிகம், விகற்பம்.
ஸுஹி - எதிர் அதிகம் நிந்தை.
பிரதி - எதிர், விலக்கு, அளவு.

பரி - சுற்ற, நன்மை, விடுதல், விளக்கம்.
உப - சமீபம், அழகு, ஆரம்பம்.

இவைகள் இப்பொருள்களை யன்றி வேறும் பல பொருள்களை யுடையன. இப்பொருள்களுக்கெல்லாம் உதாரணங்களை அங்கங்கே வருமிடங்களிற் காண்க. சில பொருள்களிலே இங்கே எழுதப்படுகின்றன.

உதாரணங்கள்.

பிர - பிரபலம், பிரபௌத்திரன்.
பரா - பராமுகம், பராசயம். பராக்கு.
அப - அபகாரம், அபவாதம்.
சம் - சம்போகம், சம்பூரணம்.
அநு - அநுமானம், அநுசிவி.
அவ - அவமானம், அவகுணம்.
நிர் - நிர்மலம், நிரஞ்சனம், நிர்ணயம்.
துர் - துர்க்குணம், துரந்தம்.
வி - விமலன், விசயம்.
ஆ - ஆகன்னம், ஆகமநம்.
நி - நிக்கிரகம், நிகாரம்.
அதி - அதிபன், அதிதேவதை.
அபி - அபிதானம், அபிகீர்ணம்.
அதி - அதிபலம், அதிரேகம்.
சு - சுகுணம், சுவாகதம்.
உத் - உத்பாதம், உத்தானம்.
அபி - அபிநயம், அபிராமம்.
பிரதி - பிரத்தியுபகாரம், பிரதிகூலம்.
பரி - பரிவேடம், பரிகாரம்.
உப - உபகாரம், உபசாரம்.

எத்தனையோ வினைமூலங்கள் இவ்வுபசர்க்கங்கள் தனித்தனி சேருதலினால் எத்தனையோ பல வேறுவகைப்பட்ட பொருள்களைக் காட்டுகின்றன. க்ரு என்னும் வினைமூலம் "கார்" என விருத்தியாய்

"அம்" என்பதனோடு சேர்ந்து காரம் என நின்று செயல் என்னும் பொருளினைக் காட்டும். இஃது, இவ்வுபசர்க்கங்கள் பல சேர்தலினால் வேறு வேறு பொருளுடையனவாகும்.

வரலாறு.

பிர: பிரகாரம் - ஒப்பு, அதிகம், பிரதானம்.
அப: அபகாரம் - தீங்கு செய்தல்.
சம்: சம்ஸ்காரம் - சுத்திசெய்தல்.
அநு: அநுகாரம் - ஒப்பச் செய்தல்.
துஸ்: துஷ்காரம் - தீயனவாக்குதல்.
வி: விகாரம் - வேறுக்குதல்.
ஆ: ஆகாரம் - இங்கிதம், சரீரசேட்டை.
நி: நிகாரம் - குற்றமேற்றுதல்.
அதிகாரம் - தொடக்கம், அரசுசெய்தல்.
சு: சுகாரம் - நன்மையான செயல்.
உத்: உத்காரம் - கூட்டமாக்குதல்.
பிரதி: பிரதிகாரம் - எதிர்ச்செயல்.
பரி: பரிகாரம் - அழுத்துதல்.
உப: உபகாரம் - உதவுதல்.

இங்கேகரு என்னும் வினையடியாற் பிறந்த காரம் என்பது பிர முதலிய உபசர்க்கங்களோடு கூடிக்கூடி வேறு வேறு பொருள் பயந்தவாறு காண்க. இப்படி உபசர்க்கங்களோடு கூடி வேறுபடுவன பல. சில, நாம் முன்னர்ப் பிரகடனஞ்செய்த "இலக்கணசந்திரிகை" என்னும் புத்தகத்திற் காணப்படும்.

இவ்வுபசர்க்கங்கள் சில இடங்களிலே யாதும் பொருள் காட்டாதனவாய் வாளாங்கு வருதலையுமுடையன என்று சிலர் கூறுவர்; அதனைப் பின் வருஞ் சுலோகமும் புலப்படுத்தும்.

சிசு பாலவதம். கO. கரு.

[illegible] |
[illegible] ||

ஏறக்குறைய இந்த உபசர்க்கங்களெல்லாந் தமிழ் நூல்களிற் காணப்படுவனவாம். அவ என்பதும், துஸ் என்பதும் நாலடியாரிற் காணப்படுகின்றன. "அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்" (பெரியாரை-ரு) "துச்சாரி நீகண்ட வின்பமெனக்கெனைத்தாற்கூறு" (பிறர்மனை. ச.) ஆ, பரி, அநு, பிர முதலிய பல பாரதத்திற் காணப்படுகின்றன. "ஆகன்ன முறச்செம்பொன் வரைவில் வாங்கி" (அருச்சுனன்றீர். சகூ) "கலகமிடும் பரிதாப மகற்றினர்" (காண்டவ. கரு) "அநுசநிருபன் புதல்வர்' (சம்பவ-ககo) பிரகிலாதன், அநுகிலாதன் சங்கிலாதன் என்னும் நாமதேயங்களிலே முன்னிற்கும் பிர, அநு, சம் என்பவைகளும் உபசர்க்கங்கள். பிரகிலாதன்முதலியோர் இரணியகசிபுவின் புத்திரர். பரா முதலிய மற்றைய உபசர்க்கங்களுந் தமிழ் நூல்களிலே அங்கங்கே வருதல் காண்க.

இந்த உபசர்க்கங்கள் இவ்வாறே வடமொழியோடன்றித்தென்மொழியோடு சேர்த்து வழங்கப்பட்டும் வருகின்றன. "அதிநுட்பம் யாவுள" (திருக்குறள். அமைச்சு சு.) "அதிநலங் கோதை சேரோதி யோடு"(இராமா, அட்சகுமா, சரு) 'ஆழியானதிவியப்பெய்தி' (இராமா. கார்த்தவீ, க) 'நன்னெறிக் கேதுவோ நலந்த விர்ந்திடுந் துன்னெறிக்கேதுவோ' (கந்தபுரா,மாயை, உஉ)'அவத்தொழில் புரியா மேன்மையன் பருக்கன்பு செய்து" (திருவாதவூர, திருப்பெரு, கருச) 'பொருள்பரி மாறுதல்' (தண்டி.)

'கூற்றங் குதித்தலுங் கைகூடும்' 'மான்றவல் வினைகால் சீக்கும் வளங்கெழு தொண்டைநாடு' 'உவப்பத்தலைக்கூடி' என்பவற்றிற் போல வினைக்குமுன்வருங் கை, கால், தலை முதலிய தமிழ்ச்சொற்களையும் பிரயோக விவேகநூலார் உபசர்க்கம் என்பர். "வினைப்பெயரோடவ்வயமாங்கையாதி மிடைந்து நின்ற தனைப்பெயரிட்ட துபசர்க்கம்" என்பது பிரயோகவிவேகம்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் } இங்ஙனம்,
சோபகிருதுஇல கார்த்திகைமீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை.

குமரன்றுணை

# நுண்பொருட்கோவை.

(அசு-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இனி, யாயாவை என்பன வேற்றுமை பெறுங்கால் யாவற்றை யாவற்றுனெனப்பட்டு ஒன்றுகவே முடிதலின், யாவென்பதன் றிரி பே யாவையெனக் கோடற்பாற்றெனின் ; அது பொருந்தாது. என்னை? அவையிரண்டும் உருபேற்றவழி ஒன்றுபோற் காணப்படினும் சாரியை பெறுங்கால், யா என்பது இயல்பாக நின்றும் யாவை என்பது வகர ஐகாரம் கெட்டும் வெவ்வேறு செய்கைப்படலானும், யா என்பது யாகாவாராயினுமென இரண்டாவது தொகப்பெற்றுவந் தாற்போலவும் அவை கண்டான் இவைதந்தான் உவைபெற்றுன் என்றாற்போல ஏனைய வகர ஐகாரம், உருபு தொகப்பெற்றுவந் தாற்போலவும் யாவை யென்பது வாராது யாவற்றையென விரிந்தே வரலானுமென்பது.

இனிச் சுட்டெழுத்துக்கள் முதனிலையாகி, வை விகுதி பெற்று அவை இவை உவையென நின்றாற்போல, யா என்பது முதனிலை யாகி வை விகுதிபெற்று யாவையென நின்று அதுவே யா எனத்தி ரிந்ததெனவும் படுமாதலின், யாவை என்பதொன்றே கூறி யா என் பது கூறுது விடுத்தல் வேண்டுமெனின்; அது பொருந்தாது என்னை; யா என்பதே அஃறிணைப்பன்மை வினைப்பெயரை யுணர்த்தலின், அதுமுதனிலையாகி விகுதிபெற்றதெனல் அமையாமையானென்பது.

இனி யாம் நாம் என்பனவே, தன்மைப்பன்மை யுணர்த்தி விகுதிப்பொருள் பெறுத கள்ளொடு சிவணி, யாங்கள் நாங்கள் என நின்றாற்போல யா என்பதே அஃறிணைப் பன்மை வினைவை யுணர் த்தலின் அதுவே விகுதிப்பொருள் பெறுத வகரஐகாரத்துடனுவது ஐகாரத்துடனுவது கூடி, யாவை யென்றாயிற்றெனக் கோடுமெனின் கள் என்பது ஆடூஉக்கள், மகடூஉக்கள், என உயர்திணை ஆண்பாற் கண்ணும் பெண்பாற்கண்ணும், பன்மையுணர்த்தியும் அவர்கள் என

உயர்திணைப்பன்மைக்கட் பொருளின்றியும், மரங்கள், மலைகளென அஃறிணை இயற்பெயர்க்கட் பொதுமைநீக்கிப் பன்மைக்குரிமையாக் கியும், பெயர்கட்கீற்றில் நிற்றலே அன்றிச் செய்தனகள், செய்வன கள், என்றாற்போல விகுதிப்பொருளின்றி அஃறிணைப்பன்மை வினை க்கீற்றிலும்வரும். அதனால், அது, யாங்கள் நாங்கள், என உயர் திணைத் தன்மைப் பன்மைக்கண்ணும் வருமியல்புடைத்தாயிற்று. வை என்பது சுட்டிடைச் சொல்லைச்சார்ந்து, அவை, இவை, உவை, எனப்பெயராதலும் விகுதிப்பொருளின்றிப் பல்லவை, கட்டியவை, கரியவை, செய்தவை, உண்டவை, உண்பவை, என்றாற்போல அஃ றிணைப்பன்மை, அகரவிறுதி நிலையைச்சார்ந்துவருதலுமன்றி, யாண் டும், இயற்பெயரைச் சார்ந்துவரு மியல்புடைத்தன்றாதலின், ஈண் டும், யா என்னும் இயற்பெயரைச் சார்ந்து, வை என்னும் இறுதி நிலை பொருளின்றிவந்ததெனல் அமையாமையானும் பறவை முதலி யவற்றுள் ஐகாரமே, வினைமுதற் பொருளுணர்த்தலின் ஆண்டுள்ள இறுதிநிலை வகர ஐகார மாகாமையானும் அவ்வைகாரமே ஈண்டு முளதெனின்; அது கொலைமுதலிய தொழிற்பெயர்க்கணன்றி ஏனைய விடத்து விகுதிப்பொருளின்றி வாராமையானும், சாரியை எனின், கோஒனை கோஒனொடு, என்றாற்போலச் சாரியை கெடாமலுருபேற்று யாவையை-யாவையொடு எனல் வரவேண்டும்: அவ்வாறு வாரா மையானும், யா என்பதுபோலவே, யாவை என்பதும் பிறிதோரி யற்பெயரெனக் கொள்ளப்படுமேயன்றி—யா என்பதன்றிரிபெயரெ னக் கொள்ளல் பொருந்தாதென்பது.

இனி அது இது உது என்பனவும், அஃது இஃது உஃது என் பனவும் வேற்றுமைப்படுமிடத்து அதனை அதனன் என ஒன்றாகவே முடிதலின் ஒன்பது என்பதே ஒன்பஃதென்ப என ஆஃதம் விரிந்து நின்றாற்போல அதுமுதலிய அம்மூன்றும் ஆய்தம் விரிந்து அஃது முதலிய அம்மூன்றாகத்திரிந்து நின்றனவெனப்படுமாதலின், அவை முதலாகிய ஆய்தப்பெயருமென வேறுகூறல் வேண்டாவெனின்; வே ற்றுமைக்கண் அதனை அதனொனென வடிவானொத்தனவாயினும் அது முதலியனவே ஆய்தம் விரிந்து நிற்பின் அவை இயற்கைமொழி யா காது செயற்கை மொழியாக முடிதலிற் றமக்கென வேறு விகுதி

பெறுது பொன் என்பது பொலமெனத் திரிந்தவிடத்து மகரத்தின் விதிபெற்றாற்போல ஏனைய வாய்தத் தொடர்க்குற்றுகா விதியே பெறல் வேண்டும். அவ்வாறு ஏனைய ஆய்தத்தொடர்போல வேற்றுமைக்கண் ஆய்தம் கெடாமல் இன்சாரியை பெறுதலின்றி ஆய்தங் கெட்டு அன்சாரியை பெறுதலானும் அல்வழிக்கண் நாற்கணத்தும் ஆய்தம் கெடாமல் முடிதலின்றி உயிர்வருவழிக் கெடாமலும் ஏனைய வருவழிக்கெட்டும் முடிதலானும் வேறு சொல்லாதலறியப்படுமென்பது.

இனிக் கூடியவை நடந்தவை முதலியவற்றுள் வை என்னுமிறுதியே காணப்படலானும் சுட்டொழிந்த ஏனைய விடத்து வகரவிறுதி காணப்படாமையானும் வையிறுதியே ஐகாரம் கெட்டு அவ் இவ் உவ் என நின்றனவெனப் படுமெனின்; அது பொருந்தாது என்னை? அவ்வகரவீறு இயல்பீறாகாது பிறிதொன்றனது விகாரமாயின், தனக்கெனவேறு விதிபெறாது தெவ் என்னும் வகர வீறுபோல உகரம் பெறுதல் வேண்டும். அவ்வாறின்றி வேற்றுமைக்கண்வற்றுப் பெற்றும் அல்வழிக்கண் வல்லெழுத்து வருவழி ஆய்தமாகியும் மெல்லெழுத்து வருவழி அவ்வெழுத்தாகியும் ஏனையவைபுணரினியல்பாகியுமுடிந்து வேறுசொல்லாகவே நிற்றலினென்பது:

இனி அஃது அவ் முதலியன இயற்கைமொழியாகாவிடின் ஏனைய ஆய்தத்தொடர் ஏனைய வகரவீறுபோல முடிதல் வேண்டுமென்பதும் தமக்கென வேறுவிதி பெறலாகாதென்பதும் என்னையோவெனின்; மரூஉ முடிபு முதலியவாக வழக்கினும், வலிக்கும் வழி வலித்தன் முதலியவாகச் செய்யுளினும் எல்லாமொழியும் விகாரமுறு மியல்புடையவாதலின், அவ்விகாரமொழிகளும் தமக்கென வேறு விதி பெறல்வேண்டும். அவ்வாறு பெறுமையானும் அங்ஙனம் வகுக்கப் புகினும், அது வரம்பின்றி முடிதலானும் விகாரமொழிகள் தமக்கென வேறுவிதி பெறுதலிலக்கணமன்றென்பது.

இனி அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் என்றாற்போலவே எக்கொற்றன் எந்நாள் எவ்யானை எவ்வாடை என எகரம் நிலைமொழியாகநின்று வருமொழி நாற்கணத்தொடும் புணர்ந்து முடிதலின் அதுவே விகுதியிடைச்சொல்லொடு புணர்ந்து எவன் எவள்

முதலியனவாக வழங்கலுமமையும்; அதனானே, யாவன் முதலியவற்றின் றிரிபெயரெனல்வேண்டாவெனின்; அது பொருந்தாது. என்னை: "வினையெஞ்சு கிளவியுமுவமக்கிளவியு, மெனவெனெச்சமுஞ் சுட்டினிறுதியு, மாங்கவென்னு முரையசைக்கிளவியும், ஞாங்கர்க்கிளந்த வல்லெழுத்து மிகுமே" எனவும். "சுட்டின்முன்னர் ஞநம த்தோன்றி, னொட்டியவொற்றிடை மிகுதல்வேண்டும்" எனவும் "யவமுன்வரினே வகரமொற்றும்" எனவும், 'உயிர்முன்வரினுமாயியறிரியாது." எனவும், "நீடவருதல் செய்யுளுளுரித்தே," எனவும், "இனியணியென்னுங்காலையுமிடனும், வினையெஞ்சுகிளவியுஞ் சுட்டுமன்ன" எனவும், "சுட்டினியற்கை முற்கிளந்தற்றே' எனவும், "சுட்டின்முன்னருமத் தொழிற்றாகும்' எனவும், "ஏனவை வரினே மேனிலை யியல்பே' எனவும், 'தன்றொழி லுரைக்கும் வினாவின்கிளவி' எனவும், "மாறுகொளெச்சமும் வினாவும்" எனவும், அ இ உ என்னு மூன்று சுட்டையும், ஆ ஏ ஓ என்னு மூன்று வினாவையும், நிலைமொழியாக நிறுத்தி அவற்றை வருமொழிநாற்கணத்தொடும் புணர்த்தி விதிகூறிய ஆசிரியர், எகரமு மோரிடைச்சொல்லாயின், அதனையும் நிலைமொழியாக நிறுத்தி நாற்கணத்தொடும்புணர்த்தி விதி கூறுவர். அவ்வாறு கூறாது "எகர வொகரம் பெயர்க்கீறாகா, முன்னிலை மொழிய என்மனார்புலவர், தேற்றமுஞ் சிறப்புமல்வழியான" எனவும் " தேற்றவெகரமுஞ் சிறப்பினொவ்வும், மேற்கூறியற்கைவல்லெழுத்துமிகா' எனவும், ஏனையவற்றுக்கே விதிகூறி, எகர ஒகரம் இடைச்சொல்லாக ஈறாதலின்றென விலக்கினமையானும் அவை பெயர் வினைஉரி என்னும் ஏனைமூன்றனுள்ளும் ஒன்றாகாமையானுமென்பது. இதுவன்றிப் பொருள்குறியாதன சொல்லாகாமையிற் பெயர் வினை இடை உரி என்னும் நான்கனுள் எச்சொல்லாயினும் முதனிலையாக நின்று விகுதியொடு புணர்ந்து பெயராக வழங்குமாயின் அது நிலைமொழியாகநின்று வருமொழியொடுபுணர்ந்தும்வழங்கலியற்கை; அவ்வியற்கையானே அகர முதலிய சுட்டிடைச்சொற்களும் விகுதியொடு புணர்ந்து அவன் இவன் உவனெனவும், வருமொழியொடு புணர்ந்து அக்கொற்றன் இச்சாத்தன் உத்தேவனெனவும் வழங்கும். இவ்வாற்றானே, எவன் ஏவன் முதலியவற்றுள் எகர ஏகாரங்களை முதனிலையெனின், அவைவருமொழியொடு புணர்ந்தும் வழங்கல்வே

ண்டுமன்றே. அவ்வாறு ஏகாரம் வருமொழியொடு புணர்ந்து வழங்காமையின், ஏவன் முதலிய சொற்கள் யாவன் முதலியவற்றின் றிரிபெயரெனவே கொள்ளப்படுமாதலின் அதுபோலவே எவன் முதலியவும் திரிபெயரெனப்படுமன்றி எகர முதனிலையாகி விகுதிபெற்றனவல்லவென்பது.

(இன்னும்வரும்.)

இங்ஙனம்.

அ. சண்முகம்பிள்ளை.

---

உ

# தருக்கசூத்திரமுதற்பாடம்.

## II. மேற்கோளியல்.

---

42. தனிமொழிபுறப்பு ஒரு பொருளைத்தந்து நிற்குமாயினும் தருக்கஞ்செவ்வனே நடத்தற்கு மனத்தின்கண் நினைந்த நினைவை மாண்புறமுடித்துக்காட்டுந் தொடர்மொழியே மிக உபகாரமாய் நிற்கும்.

"நிருணய நினைவை மொழிமுறை நிறுத்தில்
மேற்கோ ளென்று மொழிகுவர் மேலோர்" (தருக்கசூத்திரம்)

இயற்றமிழ் இலக்கண ஆசிரியர்கள் வாக்கியமென்று இயம்புமதைத் தருக்க நூலாசிரியர்கள் மேற்கோளென்று கூறுப. மேற்கோள்களெல்லாம் வாக்கியங்களாம். வாக்கியங்களெல்லாந் தருக்க மேற்கோள்களாகா. பொதுவாய்ச்சுட்டிக்கூறும் வாக்கியங்களே மேற்கோள்களாம். அவ்வாக்கியங்கள் யாதாமொன்று பற்றி உடன் பாட்டிலேனும் எதிர்மறையிலேனும் நிச்சயிக்கப்பட்ட அறிவைக் கூறா நிற்பனவாம். ஈங்கு இருபொருள்களை ஒப்பிட்டுக் கூறுந்தன்மை இசைந்து நடைபெறல்வேண்டும்.

"ஒப்பிடு பொருள்குறி யோரிரு மொழியுட
னவ்விரு மொழிக்கு ளமையிணை வதனை
நிதானித் தாங்கிசை வினையுட னுழு
வகையுடன் மேற்கோள் வயங்கு மென்ப" (தருக்கசூத்திரம்)

உத்தரங்கூறுமாறு வயங்குங் கடா வாக்கியம் அல்லது ஏவல் வாக்கியம் முதலியனவற்றை மேற்கோள்களெனக் கூறுர் என்க. மேற்கோள்களாகிய வாக்கியங்களை இரண்டு முக்கிய பிரிவினையுடையனவாக தார்க்கீகர்கள் வகுத்திருக்கின்றுர்கள்.

அவையாவன:—

1. நிபந்தனையில்லாதது
2. நிபந்தனையுள்ளது

I. உதாரணம். 1. இவ்வுலகம் பேரறிவுடைய இறைவனைத் தனக்கு நிமித்த காரணமாயுடைத்து.

2. மனிதர்கள் தாழ்ந்த நிலையினின்று, யாதோர் உதவியுமன்றி மேம்பாடுறு நிலையமடையும் ஆற்றல் உள்ளவர்களல்லர்.

இவையிரண்டும் சுயம்பித மேற்கோளின்பாலுறும். ஏனெனில் நிபந்தனையில்லாததாகி நடைபெறு மாற்றுலென்க.

II. உத்தேசமேற்கோள், நிபந்தனையோடு கூடியதாயேனும், தழுவுதலில்லாத புணரிடைச்சொற்களால் பிரிக்கப்பட்ட பற்பல தெரிவினையுடையதாயேனும் நடைபெறும்.

உதாரணம். 1. "இவ்வுலகம் இயற்கையிலேயே தோன்றினதாயில்லாதிருக்குமானுல், அது பேரறிவுடைய ஒரு முழுமுதலைத்தனக்குக் காரணமாய் உடைத்தாயிருத்தல் வேண்டும்."

(2) "மனிதர்கள் யாதொரு உதவியுமின்றி மேன்மையான நிலையை அடையும் ஆற்றல் உடையவர்களாயிருத்தல் வேண்டும். அல்லது முதலில் நாகரீகத்தின் ஆரம்பம் கடவுளிடத்தினின்றேயுண்டாயிருத்தல் வேண்டும்."

இவற்றுள் முதல் உதாரணம் நிபந்தனைமேற்கோள். ஏனெனில் 'ஆனுல்' என்பது நிபந்தனைகாட்டி நிற்றலாலென்க. இரண்டாவது

தழாமேற்கோள். ஏனெனில் ‘அல்லது’ என்ற தழாப் புணரிடைச் சொல் தெரிவினைத் தெரித்துக்காட்டி நிற்றலால் என்க.

இவ்வுதாரணங்களெல்லாம் மேற்கோளின்பாற்படும் வாக்கியங்களாம்.

43. அன்றியும் ‘அங்குபோய் திருமுறை ஓது;’ ‘மனிதர்கள் தாங்களே கடவுளை அறியுஞ்சக்தியுடையவர்களா? என்பன போன்றவைகளும், மனிதன் தானே நாகரீகமடையும் ஆற்றலில்லாதவனுகில், முதல்முதல் நாகரீக ஆரம்பம் எங்கிருந்து கிட்டிற்று? இது நிபந்தனைக்கேள்வி.

இம்முடிவினை அங்கீகரி அல்லது தருக்கத்தைமறு; இது தழுவுதலில்லாத ஏவல்; மற்றவை இவைபற்றி உய்த்துணர்ந்துகொள்க. இவையெல்லாம் மேற்கோளாகா.

44. நாம் இனி சுயம்பிதமேற்கோளைப்பற்றி ஒரு சிறிது பேசுவாம்.

இம்மேற்கோள் அளவினுற் பகுக்கப்பட்டதும் குணத்தினுலே பகுக்கப்பட்டதுமென இருவகைப்படும். பொதுமேற்கோளும் சிறப்புமேற்கோளும் அளவின்பாற்படும். உடன்பாட்டுமேற்கோளும் எதிர்மறைமேற்கோளும் குணத்தின்பாலுறும்.

“பயனிலைப் பண்பெழு வாய்க்கெலாம் பற்றிற்
பொதுமேற் கோளெனப் புகலுவர் புலவர். (த—ம்)

“எல்லா உலோகங்களும் இயற்கைப் பொருள்களாயிருக்கின்றன.” இம்மேற்கோளில் பயனிலையின் பண்பாகிய இயற்கைத்தன்மை (வெவ்வேறு பகுதியாய்ப் பிரிக்கப்படாத் தன்மை) எல்லா உலோகங்களுக்கு முரித்தான உண்மையேயாம். இது பொதுமேற்கோள்.

(2) பயனிலைப் பண்பெழு வாய்க்கெலா மின்றி
யெழுவா யதனு ளின்னதென் றியம்பிடா
தியம்பிற் சிறப்பென வியம்புவ ரினிதே. (த—ம்)

"சிலமனிதர்கள் அறிவுடையவர்களாயிருக்கிறார்கள்." பயனிலையின் பண்பாகிய அறிவுடைமை எல்லா மனிதருக்கும் உரித்தாகாமல் (இத்தனை மனிதர்களென்று குறிப்பிட்டுக் கூறப்பெறாத) சில மனிதர்களுக்கு உரித்தானமையால், இது சிறப்பு மேற்கோள்.

(3) எழுவாய் பயனிலை யொற்றுமை யாகிப்
பயனிலைப் பண்பை எழுவாய் பற்றிடில்
உடன்பா டென்ன வுரைப்ப ருணர்ந்தோர்.

"தங்கம் ஒரு மஞ்சள்நிறமுள்ள வஸ்துவாயிருக்கிறது."

இதில் மஞ்சள்நிறமுள்ள வஸ்துக்களுக்கும் தங்கத்துக்குமுள்ள ஒற்றுமை கூறப்பட்டு பயனிலைப் பண்பு தங்கத்தின்மாட்டு வயங்கி நிற்றலைக்காண்க.

(4) பயனிலைப் பண்பொரு சிறிதெழு வாய்தனிற்
பற்றிடா திருத்தி லெதிர்மறை பகர்வர். (த-ம்)

"தங்கம் இலகுவாய் உருகுந் தன்மையுடையதல்ல."

பயனிலையின் பண்பாகிய 'இலகுவாய் உருகுந் தன்மை' எழுவாயிடை (தங்கத்தின் மாட்டு) இல்லாத் தன்மையைக் கூறுமாற்றால் இஃது எதிர்மறைமேற்கோளாகும்.

'நக்கீரர் அறிவிற் பெரியவராயிருந்தார்.'

இஃதுஒற்றை யுறுப்பாகிய 'நக்கீரர்' என்னும் வார்த்தையைத் தனக்கு எழுவாயாகவுடையதாதலால் ஒருமை மேற்கோள்.

46. 'உலோகங்கள் பிரயோஜனப்படக் கூடியவைகளாயிருக்கின்றன.'

ஈண்டு பயனிலை எழுவாயின் (உலோகங்களின்) முழுதுக்குமா அல்லது அதனின் ஒரு பாகத்திற்கு மாத்திரமா என்றறிய அளவு காட்டுமொழியின்மையால் இது வரையறையில்லா மேற்கோள். இதனை வரையறையுடையதாக்கிப் பின் தருக்கநூலார் அங்கீகரிப்பரென்க.

47. குணத்தைக்குறித்து நிகழும் மேற்கோள் இரண்டென்றும், அளவினைக் குறித்து நிகழும் மேற்கோள் இரண்டென்றும் முன் கூறினோம். எங்ஙனமெனில்.

| | | |
|---|---|---|
| மேற்கோள். | பொது. | உடன்பாடு......உ |
| | | எதிர்மறை......எ |
| | சிறப்பு. | உடன்பாடு......ப |
| | | எதிர்மறை......ம |

இனி இம்மேற்கோள்களைக் குறிப்பிடுவதற்காக வலது பக்கத்திற்கூறிய அறிகுறி எழுத்துக்கள் உபகாரப்படுத்தப் பெறும். ஆதலால் அவைகளை ஞாபகத்தில் வைத்திருத்தல்வேண்டும். அன்றியும் எல்லாம், ஒவ்வொரு என்பன போன்ற வார்த்தைகளை முன்னிட்டு வரும் மேற்கோள்களெல்லாம் பொதுமேற்கோளென்று அறியப்பெறும். சில, அநேக, என்ற வார்த்தைகளை முன்னிட்டு வரும் மேற்கோள்களெல்லாம் சிறப்பு மேற்கோளென்று அறியப்பெறும். இணைமொழியோடு இல்மொழி புணர்த்தில் எதிர்மறைமேற்கோளாம். இங்ஙனங் குறித்துள்ள மொழிகள்போன்றவைகளைக் கொண்டு கொடுத்த மேற்கோள் இன்ன மேற்கோளின் பாற்படுமென்று அறிந்துகொள்க.

48. 'இயற்கைப்பொருள்கள் மாத்திரம் உலோகங்களாகவிருக்கின்றன.' இம்மேற்கோள் விலக்கு மேற்கோள். ஏனெனில் இயற்கைப்பொருள்களல்லாதவை உலோகங்களாகாவென்று பொருட்கொண்டு நிற்றலால் இதில். 'மாத்திரம்' என்ற வார்த்தையும், இதுபோன்ற வேறு வார்த்தைகளும் இம்மேற்கோளைக் குறித்துநிற்பனவாம்.

49. 'எல்லாப் பையன்களும் இராமன் கொற்றன் தவிரப் பிரவேசபரீட்சையிற் றேறினார்கள்.' இது தவிர்மேற்கோள். ஏனெனில் சிலரைத் தவிர்த்து மொழிதலால்.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ண முதலியார்,
திருநெல்வேலி.

ஓம்ஃ

திருச்சிற்றம்பலம்.

# உ ள் ள து .

——:o:——

(கூரு-ம்பக்கத்தொடர்ச்சி)

---

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அந்தணர்க்குரிய வேதத்துக்கும், அதனாற் சொல்லப்பட்ட யாகாதி தருமத்துக்கும், மழைக்கும் அரசன் செங்கோல் காரணமாகும் என்னும் வாய்மையை,

543. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

542. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

என்னும் இரு திருக்குறளில் அமைத்தருளினர். ஸ்ரீஞானசம்பந்தர் "வாழ்கவந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக,, என்றதும் அது.

(ருஎ) ஐந்த்ரியாணி ஹ்ருஷீகாணி விஷயேஷுயதாததிஃ |

"தத்தமக்கேற்ற விஷயங்களிற் கொள்கையுடைய பொறிகள்போல,, என்னும் மகாபாரத வனபருவத்துப் பதினொராம் அத்தியாயத்து 22 ம் சுலோகப்பொருளை 9ல் "கோளில் பொறியிற் குணமிலவே,, என்றும்.

(ருஅ) தைவதஞ்சபதிம்மேநே ஸதாசித்தாநுவர்த்திநீ |

. "நாயகனுடைய சித்தத்துக்கியைய நடப்பவள் நாயகனைத் தெய்வமாக மதிக்கின்றாள்,, என்னும் வனபருவத்து 205 ம் அத்தியாயத்து 13 ம் சுலோகப் பொருளை 55 ல் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்,, என்றும் அமைக்கப்பட்டன.

(௩௯) ந ப்ரஜாவிஜ்ஞாநாத் பரம் ப்ரத்யபரம் ப்ரத்யப்ராஜ்ஞ வித்யதே |

"எப்பொருள்களினும் புத்திரன் சிறந்தவன்; அவனிலும் மேலாயது மற்றொன்றில்லை,, என வனபருவத்து 9 ம் அத்தியாயத்து நான்காஞ் சுலோகப் பொருள் 61 ல் "பெறுமவற்றுள்யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற,, என்றும்,

(௪0) ஆசாராத் விச்யுதோ விப்ரோ ந வேதபலமச்நுதே |

"அந்தணன் ஒழுக்கம் குன்றுவானாயின் வேதத்திற் சொல்லப்படுகின்ற பயனை அடையான்,, என மனுஸ்மிருதி 1-ம் அத்தியாயத்து 109 ம் சுலோகத்துப் பொருள் 134 ல் "பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்,, என்றும்,

(௪௧) யதா த்ருச்யந்தே லோகேஷு க்ஷமிண: ப்ருதிவீஸமா: |

"உலகத்திலே பூமிக்கு ஒப்பாகிய பொறுமையினையுடையார் காணப்படுகின்றார்,, என்னும் வனபருவத்து 29 ம் அத்தியாயத்து 31 ம் சுலோகப்பொருள் 151 ல் "அகழ்வாரைத் தாங்கு நிலம் போல,, என்றும்,

(௪௨) அஜ்ஞாநாத்தி க்ருதோ யஸ்ய க்ஷந்தவ்யமேவ தஸ்ய தத் |

"அறிவின்மையால் அபராதஞ் செய்தோனைப் பொறுத்தல் வேண்டும்,, என வனபருவத்து 28 ம் அத்தியாயத்து 27 ம் சுலோகத்திற் கூறிய பொருள் 153 ல் "வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை,, என்றும்,

(௪௩) தாநேந தபஸா |

"தவத்தோடு தானமுதலியவற்றைச் செய்து பரப்பிரமத்தை அறியமுயல்வோர் முனிவராகின்றனர்,, என்னும் பிருகதாரணியத்துஇரண்டாம் அத்தியாயத்து நான்காம் பிராம்மணத்து 22 ம் மந்திரம் உரைத்த பொருள் 295 ல் "தவத்தொடு தானஞ்செய் வாரிற்றலை,, என்றும், கர்ணபருவத்து 69 ம் அத்தியாயத்து 34 ம் சுலோகப்பொருள் 292 ல் "பொய்மையும் வாய்மை யிடத்த,, என்றும் அமைக்கப்பட்டன. மனுஸ்மிருதி முதலாம் அத்தியாயத்து 88 ம்

சுலோகத்தினும், 10 ம் அத்தியாயத்து 75 ம் சுலோகத்தினும் கூறப்பட்ட ஷட்கருமங்களையுடைய பிராமணரை 560 ல் "அறுதொழிலோர்,, என்றும், யஞ்ஞத்துக்குரிய அவிசை 259 ல் அவிசொரிந்து,, என்றும், 413 ல் "அவியுணவு,, என்றும் கூறியருளினர்.

இங்ஙனம் இவை போன்ற அனேக இலௌகிக வைதிக உண்மைகளை மகாபாரதம் மனுஸ்மிருதி முதலியவற்றிலிருந்து அமைத்தமையோடமையாது, வேதாகமங்களிலே கூறப்படும் பந்த மோக்ஷம் என்பவற்றை 23 ல் "இருமை வகைதெரிந்து,, என்றும்,

நரகத்தை 835 ல் 919 ல் "அளறு,, என்றும், இந்திரலோகத்தை 213 ல் 234 ல் 290 ல் "புத்தேளுலகு,, என்றும்,

கைலாசசங்கிதை 10 ம் அத்தியாயத்து 66 ம் சுலோகத்து ஸ்ரீநாராயணர் பரமபதத்தை 1103 ல் "தாமரைக்கண்ணா னுலகு,, என்றும்,

பரசுருதிகளிலே வழங்கப்படும் பதியாகிய பிரமத்தை 388 ல் "இறை,, என்றும், 5 ல் "இறைவன்,, என்றும், 249 ல் 355 ல் 356 ல் 423 ல் * "மெய்ப்பொருள்,, என்றும், 298 ல் "வாய்மை,, என்றும், (சாந்தோக்கியத்தினும் சுவேதாசுவதரத்தினும் முறையே உமையம்மையாரையும் சிவபிரானாரையும் உணர்த்தும் ஆதி பகவன் என்னும் இருமொழிகளையும் புணர்த்தி அம்பிகாபதி என்பது போதர) 1 ல் "ஆதிபகவன்,, என்றும், சாந்தோக்கியத்துத் தகரபுண்டரீகத்தினரை 3 ல் "மலர்மிசை யேகினான்,, என்றும், இறைவற்கு "ஒப்பாரும் மிக்காரும் இல்லை,, எனச் சுவேதாசுவதரம் கூறிய உண்மையை 7 ல் "தனக்குவமை யில்லாதான்,, என்றும், உபப்பிருங்கணத்தில் "ஔதாரிய மகராலயః,, என்பதை 8 ல் "அறவாழி யந்தணன்,, என்றும், முண்டகோபநிடதம் "சர்வஞ்ஞர்,, என்று கூறியதை 2 ல் "வாலறிவன்,, என்றும், கடவல்லி "பொறிமுதலியவைகளைக் கடந்துள்ளார்,, என்று கூறியதை 6 ல் "பொறிவாயிலைந்தவித்தான்' என்றும்.

---

* இது சாந்தோக்கியத்து ஆறாவது பிரபாடகத்து 8 ம் கண்டமுதல் 16 ம் கண்டம் இறுதியாயுள்ள ஒன்பது கண்டங்களினும் காணப்படும் சத்தியம் என்னும் பதத்தின் பரியாயம்.

(சச) விஜ்ஞாநகேவலாக்யோऽஸௌ பூதிலாதிநிரஞ்ஜந: |
நாஸ்தி தேவோ மஹேஶ்வர: ஸர்வஜ்ஞ: ஸர்வதோமுக: ||

அகலமா மாகா யத்தி லுதித்ததோர் ஞானு தித்தன்
விகலமா யுதியா னத்த மேவிடான் சந்தி தன்னை
யிகலற வியற்று மாற தெங்ஙன மென்றென் றெண்ணி
முகில்சொரி நீத்த மின்றி முடித்துநீ சந்தி யெல்லாம்.

என ஞானசித்தி ஆகமத்தினும், "தேவசவிதா,, என இருக்கு, யசுர், சாமவேதங்களினும், உபநிடதங்களினும் கூறப்பட்ட ஞானு தித்தினை 299 ல் "பொய்யாவிளக்கு' என்றும், அவ்விறைவற்குச் சாந்தோக்கியத்திற் கூறப்பட்ட எண் குணங்களை 9 ல் "எண் குணத் தான்,, என்றும், பதியினின்று வேறுருத அருட்சத்தியை 1ல் "ஆதி,, என்றும் 2, ல் 7 ல் 8 ல் 9 ல் "தாள்,, என்றும், 10 ல் "அடி,, யென்றும், பசுவை 80 ல் 326 ல் 340 ல் உயிர் என்றும் பாசத்தை 199 ல் 278 ல் "மாசு,, என்றும், 352 ல் "மருள்,, என்றும்,

எவ்விடத்தும் நீக்கமற நிறைந்த சிவபராசத்தி ஓங்குணர்விலே தமது ஞானக் கிரியைகளை அடக்கி, அதனுல் முனைப்பின்றிக் கசிந்த தொண்டினேடும் சோகம் எனப்பாவிக்குங்கால் தொடர்புபற்றிச் செல்லும் தமது அன்பு முதிர்ந்து விரிந்துழி தொடர்பு பற்றுது யாண்டும் செல்வதாய அருள் உளதாம் என்னும் உண்மையை விளக்குவாராய் 757 ல் 'அருளென்னு மன்பீன் குழவி' என்றும்.

அங்ஙனம் சிவத்தைக் கருடோகம் பாவனை போலச் சிவலோகம்பாவனை செய்தலை 358-ல் " செம்பொருள் காண்ப தறிவு ,, என்றும், 3-ல் 4-ம் " அடிசேர்ந்தார் " என்றும், 7-ல் " தாள் சேர்ந்தார்க் கல்லால் " என்றும், 9-ல் " தாளை வணங்காத் தலை,, என்றும், 10-ல் " இறைவனடி (சேர்ந்தார்) ,, என்றும்,

அங்ஙனம் சிவஞானயோகத்தினுல் உயர்ந்த தூயோரை 28-ல் " நிறைமொழி மாந்தர் ,, என்றும், 29-ல் " குணமென்னுங் குன்றேறி நின்ருர் ,, என்றும், 199-ல் 352-ல் " மாசறு காட்சி யவர் ,, என்றும், 106-ல் " மாசற்ருர் ,, என்றும், 174-ல் " புலம்வென்ற புன்மையில் காட்சி யவர் " என்றும் 346-ல் " யானென தென்னுஞ்

செறுக்கறுப்பான்,, என்றும், 199-ல் “பருடீர்ந்த மாசறு காட்சி யவர்,, என்றும், 234-ல் “புலவர்,, என்றும், 312-ல் ‘மாசற்றார்’ என்றும், 353-ல் ‘தெளிந்தார்’ என்றும், 374-ல் ‘தெள்ளியர்’ என்றும், 430-ல் 622-ல் ‘அறிவுடையார்’ என்றும், 306-ல் 457-ல் ‘இனம்’ என்றும்,

அவ்வுயர்ந்தோரால் அடையப்படும் (சோமலோகம் எனப்படும்) பிரமலோகத்தை 3-ல் ‘நிலம்’ என்றும் 24-ல் ‘வரன்’ என்றும், 222-ல் ‘மேலுலகம்’ என்றும், 247-ல் ‘அவ்வுலகம்’ என்றும், 346ல் ‘வானோர்க்குயர்ந்த வுலகம்’ என்றும்,

அவ்வுலக நிரதிசயானந்தத்தை 370-ல் ‘பேராவியற்கை’ என்றும் அருளிச்செய்தனர்.

பிருகதாரணியத்து நான்காம் அத்தியாயத்து நான்காம் பிராமணத்தில்,

* (சரு) ஆத்மாவாரே த்ரஷ்டவ்ய꞉ ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய꞉ |

‘ஆன்மாவானது காணற்பாற்று, சிரவணஞ் செய்யற்பாற்று, மனனஞ் செய்யற்பாற்று, நிதித்தியாசனஞ் செய்யற்பாற்று’ என்று கூறப்பட்டிருத்தலின், சைவாகமங்களிற் கூறப்பட்ட ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம் என்னும் இம்மூன்றையும் முறையானே உணர்த்தும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களைத் திருவள்ளுவநாயனர் உலகினர்க்கு அறிவுறுத்துவாராய், மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் கேள்வியை,

(346) கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

என்னும் திருக்குறளானும், சிரவணமாகிய விமரிசத்தை,

(357) ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

* இந்த ஆன்மா அபகதபாப்மாதி குணங்களையுடைய பரமான்மாவன்றி அபாசுருதியுடையார் நிர்க்குணான்மா அன்று.

என்னும் திருக்குறளானும், தெளிதலாகிய பாவனையை,

(358) பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

என்னும் திருக்குறளானும் உபதேசித்தருளினர். ஈண்டு மேலைத் திருக்குறள் இரண்டினும் முறையே சத்தியம், சத்து என்பவற்றின் பரியாயங்களாகிய 'மெய்ப்பொருள்' 'உள்ளது' என்னும் மொழிகளைப் பிரயோகித்து, உள்ளது என்றதினால் உணர்த்தப்பட்ட மெய்ப்பொருள் சிவபரம்பொருளேயாம் என விளக்குவாராய் நாயனார் திருக்குறளில் (உஉ-ம் இலக்கத்துச் சிவத்தின் பரியாயமாகிய) செம்பொருள் என்னும் பதத்தை மூன்றும் திருக்குறளிற் பிரயோகித்தார்.

(சகூ) ஶிவஏகொ த்⁴யேயஸ்ஸர்வம் பரித்யஜ்ய ।

"மற்றெல்லாம் விடுத்துச் சிவன் ஒருவரே தியானிக்கற்பாலர்" எனக் கண்டோக்தியினால் வேதாந்தத்துச்சிச் சிகையில் உணர்த்தப்பட்ட மெய்ப்பொருளைப்பக்குவான்மாக்கள் யாவரும் தம் அவிச்சை கெட்டு அப்பொருளோடு ஒற்றுமைப்பட்டுச் சாமியமுற இடைவிடாது சிவபாவனை செய்து அச்சிவத்தைக் காண்டலே அறிவினுளெல்லாம் தலையாய மெய்யறிவென்பாராய்த் துரிய நிர்மல ஞானயோக நிலையை நம் வள்ளுவனார் 'செம்பொருள் காண்பதறிவு' என்று உபதேசித்தருளினர். செம்பொருட் சிறப்பை 298-ல் 'அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்' எனவும், 34-ல் 'மனத்துக்கண் மாசிலனாதலனைத்தறன்' எனவும், 348-ல் 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்' எனவும், 359-ல் 'சார்புணர்ந்து சார்புகெடவொழுகின்' எனவும் ஆங்காங்கு திருக்குறள்களில் நேருமிடங்கடோறும் சூசிப்பித் தருளினர்.

"புலையனேயெனினும் அன்பினொடு சிவ என்று சொல்வானேல் அவனொடுறைக, அவனொடு பேசுக, அவனோடு உண்ணுக,"

(சஎ) ஶ்வபசோபி யதா³ ஶிவேதி வாசம் வதே³த் ஸஹ
ஸம்வதே³த் ஸஹ ஸம்வஸேத் ஸஹ பு⁴ஞ்ஜீத ।

என்று முண்டகோபகிடதம் உரைத்த பொருளைச் சிவஞான சுவாமிகள்,

சிவனெனு மொழியைக் கொடியசண் டாளன் செப்பிடி னவனுட னுறைக, வவனொடு கலந்து பேசுக வவனோ டருகிருந் துண்ணுக வென்னு, முவமையில் சுருதிப்பொருடனை நம்பாவூமரோ டுடன்பயில்கொடியோ, னிவனெனக் கழித்தாலையனே கதிவேறெனக்கிலை கலைசையாண்டகையே.

என்னும் செய்யுளால் விளக்கியருளினர். திருநாவுக்கரசு நாயனார் அவ்வியல்பினோரை "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே" என்றும் திருவாய்மலர்ந்தருளினர். இங்ஙனம் சிவ நாமத்தை அன்பினோடு உச்சாரணஞ் செய்வோர் உயர்ச்சி இத்துணைப்பெரிதேயாமாயின், சிவசப்தத்தைச் சொல்வதினும் சிவோகம்பாவனை செய்து சிவஞானக்கண்ணினாற் செம்பொருளை உணர்ந்து, அதனால் அன்பே சிவமாய் அமர்ந்த திருவள்ளுவ மெய்ஞ்ஞானியருடைய பெருமை அளவிடப்படாதென்பது,

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

என்னும் தமது திருக்குறள் இலக்கியத்துக்கு முழுமையும் தான் இலக்காகி, தாம் திருவாய்மலர்ந்தருளிய 1330 அருங்குறள்களும் இனிமை வாய்ந்தனவேயாக, துவாதசாந்தபுரமாகிய மதுரைச் செந்தமிழ்த் தெய்வச்சங்கப் பலகையின்கண்ணே சிவாஞ்ஞையினாலே திருவள்ளுவநாயனாரோடு முருகக்கடவுளின் திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய உருத்திரசன்மர் ஒருவரே ஏறியிருக்க என்று ஆகாயத்திருந்து அங்குள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமை செய்யுமாறு முழங்கி எழுந்த,

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க

வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

என்னும் அசரீரிவாக்கினல் அறிவுறுத்தப்பட்டது. படவே, வள்ளுவன் ஒருவன் ‘சிவ’ என்று சொல்வானேல் அவனேடுறைந்து பேசி உண்க என்றும், வள்ளுவன் செம்பொருட் சிவத்தை உணர்ந்தவனேயாயின் மற்றியாரும் இவனேடு சமத்துவமாய் இருக்கவேணும் இடம்பெருத உயர்ச்சியுடையனுவன் என்றும் உணர்த்தியவாரும் என்க.

இதுகாறுங் கூறியவாற்முன், சாமவேதத்தைச்சார்ந்த சாந்தோக்கியத்து ஆருவது பிரபாடகத்து முதலாம் மந்திரத்திற் கண்ட ஈரெழுத்தாலாய சத் என்றது (அருட்) சத்தி விசிட்ட சிவனும் எனவும், இந்தச் சத்தின் வித்தை சாந்தோக்கியத்துப் பதினறு கண்டங்களில் உாைக்கப்பட்டதாம் எனவும், அங்ஙனம் வியாசர் இந்த வித்தையை வேதாந்தசூத்திரத்து முதல் அத்தியாயத்து முதற்பாதத்து ஐந்தாம் சூத்திரமுதல் பன்னிரண்டாஞ் சூத்திர இறுதியாய்ப் போந்தஎட்டுச் சூத்திரங்களால் விளக்கியருளினர் எனவும், இந்தச் சத்வித்தை மற்றைப் பரசுருதித் தகரவித்தை யாதிகளினெல்லாம் சமந்வயமாம் எனவும் உண்மை கண்டுபிடிக்க, கடவுள் வாழ்த்து முதல் ஊடலுவகை இறுதியாய்ப் போந்த நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களுள் ஞானத்தை நிலேயாமை, துறவு மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களினல் உபதேசிக்கப்போந்த திருவள்ளுவநாயனுர் மேய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் ஞானத்துச் சரியை கிரியை யோகங்கள் முறையே 356 ம் 357 358 ம் திருக்குறள்களால் உணர்த்துவாராய், 357 ல் அச் சாந்தோக்கியத்துச் சத் என்னும் மொழிக்குத் தமிழ்ப் பரியாயமாய்,

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து.

என்னும் திருக்குறளுக்கு இலக்காய், சமஸ்தவேதார்த்தங்களாகிய பெரிய பாரத்தைக் கொண்டுய்க்கும் திட்பமுடைய இந்நான்கு எழுத்தாலாய உள்ளது என்னும் மொழியை 357 ம் குறளிற் பிர

யோகித்து, அதன் பொருள் சிவபரம்பொருள் என்றுணர்த்த 358 ல் செம்போருள் என்றும், இதனைச் சிவபாவனையினுல் உணர்தல் வேண்டும் என்பாராய்ச் செம்பொருள் காண்பதறிவு என்றும் நுண்ணிய விசேடவுபதேசஞ் செய்து, மற்றைச் சாமானிய வைதிக சன்மார்க்க தருமங்களையும் போதித்தருளினர். இங்ஙனம் வேதங்களுக்குப் பின்னர்த் தோன்றி, வேதார்த்தங்களை அடக்கி, வடமொழி நாயகனுக்கு நாயகி எனச் சிறப்பிக்கப்படும் செந்தமிழில் இயற்றப்பட்டமையான் இத்திருக்குறள் உத்தரவேதம் எனப் பெயர் படைத்தது. ஆகலின் தத்தமாற்றங்கள் நிறுவிய பிறசமயிகள் தத்தம் கருத்துக் கியையத் திருக்குறளில் ஒவ்வோரிடங்களின் ஒவ்வோர் பொருள் அடங்கியிருப்பக் கண்டு அதனைத் தத்தம் நூல் என்று கூறுதல் அடாதாம் என்றுணர்த்த, சிவநுட்பொருள் அறிந்த ஔவைத்தாயார் ஸ்பஷ்டலிங்கங்களையுடைய மூவர்தமிழ், கோவை திருவாசகம், திருமூலர்சோல் என்னும் முத்திறநூலை எடுத்து விதந்து, இவற்றோடு அஸ்பஷ்ட லிங்கமுடைய தேவர்குறள், திருநான்மறைமுடிவு, முனிமோழி என்னும் முத்திற நூல்களையும் எடுத்து இயைத்து இவை ஆறும் ஒருபொருண் மேலதென்றுணர,

> தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
> மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லு
> மொருவா சகமென் றுணர்.

என்றருளிச் செய்தார்.

தேவாரம் கோவை திருவாசகம் திருமந்திரம் என்னும் மூன்றையும் பார்த்த பார்வையில் அவை சைவநூல்கள் என அறிதற்கியன்ற பதக்குறிகள் (ஆண்டு வெளிப்படையாய்க் கிடத்தலின் ஸ்பஷ்டலிங்கமுடைய என்றும், அங்ஙனம் தேவர்குறள், திருநான்மறை முடிவு, வேதாந்தசூத்திரம் மூன்றும் அறிதற்கியலாமையின் அவற்றை அஸ்பஷ்டலிங்கமுடைய என்றுங் கூறப்பட்டது.

திருப்பரங்குன்றம்
16—4—09.

ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர்,

# புத்தகக் குறிப்பு.

தென்னை. இப்பெயர் புனைந்த சிறுநூல் மயிலாப்பூர் அக்ரிகல்சரல் இன்ஸ்பெக்டர் மகா-௱-௱-ஸ்ரீ இராஜகோபாலநாயடு அவர்கள் இயற்றியது. எட்டுப்பக்க உருவமுள்ள ராயல் 75 பக்கங்கள் அடங்கியது. ஆங்காங்கு முக்கியமான படங்களையுடையது. நம் குடித்தனக்காரர்கள் நம் தென்னையைப்பற்றி அறியவேண்டிய அரியவிஷயங்கள் பல இச்சிறு நூலின்கண் மிகவும் எளியநடையில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. தென்னை விஸ்தாரமாய்ப் பயிர்செய்யப்படும் நம் நாட்டாருக்கும் இலங்கைத் தீவார்க்கும் இந்நூல் இன்றியமையாதது. தென்னையைப்பற்றித் தமிழில் இவ்விதநூல் இதுவரை ஏற்பட்டிருப்பதாகப் புலப்படவில்லை. ஏனைய சுதேசபாஷைகளிலும் இந்நூலை மொழிபெயர்த்தல் குடிகளுக்குப் பேருபகாரமாயிருக்கும். ஒவ்வொரு குடித்தனக்காரன் கையிலும் இப்புத்தகமிருத்தல் நலம்.

தென்னையில் 32 வகைகள் இருக்கின்றனவென்றும் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க அது பயிர்செய்யப்படும் முறைகளையும் அவற்றைச் சீர்திருத்தவேண்டிய வழிகளையும் அதற்கு எருவிட்டு தண்ணீர் பாய்ச்சி வளர்ப்பதின் அருமை முறைகளையும் வண்டு புழு மரநாய் முதலிய அதன் சத்துருக்களினின்றும் அதனைப் பேணும் முறைகளையும் நன்குணர்ந்து இந்நூலாசிரியர் எடுத்து விளக்கியிருப்பதற்கு நம் நாட்டார் நன்றிபாராட்டல் வேண்டும்.

இந்நூலைப் படிக்குங்கால் தென்னையில் முத்துண்டாகின்றது என்ற விஷயம் பெருவியப்பையும் ஆனந்தத்தையும் உண்டாக்காமலிராது. தமிழ்நாட்டார் முத்துஉற்பத்தியாகும் இடங்கள் 20 என்று கூறுவர். அவற்றில் தென்னையைக்கூறவில்லை. ஆகையால் இஃது ஒரு புதுமையே. இவ்விஷயமாய் இதன் 65-ம் பக்கத்திற் கூறியிருக்கும் விஷயங்களில் இரண்டொன்றை எடுத்துக்கூறுவோம். அவையாவன:

"சீனதேசத்தார் இம்முத்துக்களை உயர்வாக நினைக்கிறார்கள். ஏனெனில் அனேகவித வியாதிகளும் பேய்பிசாசுகளும் அவைகளினால் விலகுகின்றனவாம். ஆகையால் இராஜாக்கள் நவரத்தினங்களில் இதை ஒன்றாக மதித்து அதிக விலைகொடுத்து வாங்கி ஆபரணங்கள் செய்து தரித்துக்கொள்ளுகிறார்கள். இதற்கு ஒருவித நீலவர்ணம் உண்டு. இதற்குக் கலாபா என்று பெயர். சிலவருஷங்களுக்கு முன் சுயமான ஒரு தேங்காய் முத்து ஒன்றை இங்கிலாந்துக்கு ஹிக்ஸன் என்பவர் கொண்டுபோனார். அங்கேயிருக்கிற க்யூ (Kew) பட்டணத்திலுள்ள கவர்ண்மெண்டு தோட்டத்துக்கண்காட்சிச்சாலையில் அஃது இருக்கிறது. அது மிகவும் வெளுத்தும் முட்டைபோலுமிருக்கிறது. கடல் முத்து எவ்வாறு சுண்ணும்பினால் செய்யப்பட்டிருக்கிறதோ அவ்வாறேதான் தேங்காய் முத்தும். இஃது எவ்வாறு தேங்காய்ச் சதையில் உண்டாகிறதென்பது இன்னும் யாருக்கும் தெரியவில்லை."

இவ்வித நூல்களில் பாஷையினும் விஷயமே முக்கியமாயினும் பாஷையும் திருத்தமாயிருத்தல் சிறப்பாம். எழுத்துப்பிழை, சொற் பிழை, சந்திப்பிழை, முதலியவை சிற்சில இடங்களிற் காணப்படு கின்றன. உதாரணமாக இதன் 65-ம் பககத்தில் இரனூரு என்று காணப்படுகிறது. இதுபோன்ற பிழைகளை நன்கு கவனித்து அடு தபதிப்பில் திருத்துவாராக. இதன் விலை ரூபா ஒன்று மிகவும் அதி கம். 6 அல்லது 8 அணு இருக்குமானால் பலபேர் வாங்கிப்படிப்பதற் கு ஏதுவாயிருக்கும். நம் கவர்ண்மெண்டாரும் விவசாயசங்கத்தார் களும் இப்புத்தகத்தை மிகுதியாக வாங்கிக் கிராமங்களிற் பரவச் செய்தல் பேருபகாரமாயிருக்கும்.

---

## இராமகிருஷ்ணவிஜயம்.

இப்பெயர் பூண்ட சிறுநூல் மகா-௱-௱-ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்களால் இயற்றப்பட்டது. கிரௌன் 80 பக்கங்கள் அடங்கி யது. விலையும் சரசமானது. (6-அணு). இதன் முகப்பில் ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சரது அழகிய படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கி றது. இஃது இருபகுதிகளுடையது. முதற்பாகம் ஸ்ரீபரமஹம்ச ரது அற்புதச் சரித்திரச் சுருக்கமும் உ-ம் பாகம் அம்மகானது கதா மிருத சங்கிரகமும் அடங்கியுள்ளன. இதன் நடை சுலபமாயும் கம் பீரமாயுமிருக்கின்றது. இலக்கணப்பண்டிதர்களுக்குச் சிலவழுக்கள் இரண்டோரிடங்களில் தோற்றினாலும் அவைபெருங்குற்றமாகா. ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரது திவ்விய சரித்திரம் மாக்ஸ்முல்லர் முஜூம்தார், விவேகாநந்தர் முதலிய சான்றோரால் ஆங்கிலபாஷை யில் எழுதப்பட்டிருப்பதுமன்றி பங்காளியில் மகான் இராமச்சந்திர தத்தர் என்பவரால் எழுதப்பட்டிருக்கின்றது. இம்மகானது திவ் விய சரித்திரம் பத்திரிகைமூலமாய்ப் பலருக்குந் தெரிந்ததாயினும் தமிழின்கண் நூல் உருவமாக முதலில் அமைந்தது இச்சமயமே. இந்நூலை நம் கலாசாலை மாணவச்சிறாரும் ஏனையோரும் வாங்கிப்படி த்து ஆனந்தமடைவார்களாக.

சேதுபதி ஹைஸ்கூல்,
மதுரை.

எஸ். சாமிநாதையர்,
மதுரைத்தமிழ்ச்சங்க வித்வான்.

---

குறிப்பு.— நம் செந்தமிழ்க்கு அநுமானவிளக்க மென்னும் அரியபெரிய விஷயமெழுதிவருகின்ற ஸ்ரீ. உ. வே. திரு. நாராயணையங்கார் ஸ்வாமிகள், தமது குடும்பத்தில் நேர்ந்த துக்கசம்பவமொன்றால் இருமுறையாக அதனை எழுதிவரக்கூடவில்லை. அவ்விஷயம் அடுத்த பகுதி முதல் வெளிவருமென் பதை, அதுபற்றி நம்மை உசாவிய நண்பர்கட்கு இதன்மூலம் அறிவிக் கின்றோம். ப—ர்.

**எ-து. தலைமகனைத் தோழி வரைவுகடாயது.**

**இ-ள்.** கடலின்கட் சங்குகளே பெரியமருப்பாகக் காற்றே பாகனாகத் திரையே அடற்கோட்டியானையாக வருத்திக் கரையைக் குத்துகின்ற நீண்ட சேர்ப்பையுடையானே! செறிந்த இருளின்கண் வாராதொழிக ... (எ-று)

சச கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க—தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னோக்கி யிடம்.

**எ-து பகற்குறியிடங்காட்டியது.**

**இ-ள்.** மிக்கபுலானாற்றத்தைப் புன்னைப்பூக்கள் நீக்குந் துறைவனே! புலாலிற்பட்ட புள்ளைக்கடியவேண்டிப் புக்கவழைமானோக்கிவிளையாடுமிடம், பெரியபுல்லாகிய தாழையும் ஞாழலும் நெருங்கியுயர்ந்ததாழ்பொழில்; **எ-று.**

சரு தாழை தவழ்ந்துலாம் வெண்மணற் றண்கானன்
மாழை நுளையர் மடமக—ளேழை
யிணைநாடி வில்லா விருந்தடங்க்ண் கண்டுந்
துணைநாடி னன்றோ மிலன்.

**எ-து தலைமகன் சொல்லிய குறிவழியறிந்து தலைமகளைக்கண்ட பாங்கன் தலைமகனை வியந்து சொல்லியது.**

**இ-ள்.** தாழைகள் படர்ந்து பரக்கும் வெண்மணலையுடைய தண்கானலின்கண் வாழும் மாழைமையையுடைய நுளையர்மடமகளாகிய இவ்வேழையுடைய ஒப்புவமை நாடிலில்லாத இருந்தடங்கண்கண்டுந் துணையை நாடிய எம்பெருமான் ஒரு குற்றமுமிலன்; **எ-று.** (கச)

சசு தந்தாயல் வேண்டாவோர் நாட்கேட்டுத் தாழாது
வந்தானீ யெய்துதல் வாயான்மற்—றெந்தாய்
மறிமகர வார்குழையாள் வாழாணீ வார
லெறிமகரங் கொட்கு மிரா.

**எ-து தோழி நெறிவிலக்கி வரைவுகடாயது.**

**இ-ள்.** சிலரைக் கொணர்ந்து ஆராயல்வேண்டுவதில்லை; நல்லதொரு நாட்கேட்டு நீட்டியாதே நீவரைதற்கு வந்தால் இவளை எய்துதல் மெய்ம்மையால்: எம்மிறைவனே! எறிசுறாக்கள் கழியெங்குஞ் சுழலுமிராவின்கண் வா

ரல் : வரின், மறிமகர வார்குழையாள் உயிர் வாழாள் ; எ-று. (கரு)

சஎ பண்ணாது பண்மேற்றே பாடுங் கழிக்கான
லெண்ணாது கண்டார்க்கே யேரணங்கா—லெண்ணாது
சார்வார்சான் றாண்மை சலித்திலா மற்றிவளைக்
காவார் *கயிறுரீஇவிட் டார்.

**எ-து பாங்கன் றலைமகனைக் கண்டு தலைமகளை வியந்துசொல்லியது.**

இ-ள். யாழினைப் பண்ணாது பண்மேற்சேரத் தேன்கள்பாடுங் கழிக்கானலின்கண் ஆராயாதே வந்து கண்டார்க்கே அழகிய தெய்வங்களாம், ஆதலான், அறிவினானாராயாது இறந்துபடுவார் சான்றாண்மையின்கண் வேறுபட்டிலாமற்றிவளைக்காவாது கயிறுரீஇவிட்டார் சான்றாண்மையின் வேறுபட்டார் ; எ-று. (கசு)

சஅ திரைமேற்போந் தெஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவும் பாக்கம் விளக்காக்—கரைமேல்
விடுவாய்ப் பசும்புற விப்பிகான் முத்தம்
படுவா யிருளகற்றும் பாத்து.†

**எ-து தலைமகற்கு இரவுக்குறி மறுத்தது.**

இ-ள். திரைமேற்போந்து கரைமேலொழிந்த விடுவாயையும் பசும்புறத்தையுமுடைய இப்பிகான்ற முத்தம், தெண்கழிக்கானலின் விரைமேவும் பாக்கம் ஒளியுண்டாம்வகை இருள்படுமிடமெல்லாம் அவ்விருளைப் பகுத்தகற்றும் ; எ-று. (களஎ)

சகூ எங்கு வருதி யிருங்கழித் தண்சேர்ப்ப
பொங்கு திரையுதைப்பப் போந்தொழிந்த—சங்கு
நரன்றுயிர்த்த நித்தில நள்ளிருள்கால் சீக்கு
வரன்றுயிர்த்த பாக்கத்து வந்து.

**இதுவுமது.**

இ-ள். எவ்விடத்தானே வருவாய் இருங்கழித்தண் சேர்ப்பனே! பொங்குதிரைகளானே யுதைக்கப்பட்டுப் போந்து கரையின்கட் டங்கிய சங்குகள்

---

* "வண்டலர் கோதை வாட்கண் வனமுலை வளர்த்த தாயர், கண்டுயிருண்ணுங் கூற்றங் **கயிறுரீஇக்** காட்டியிட்டார்." என்றார் **சிந்தாமணியினும்.** (இலக்கணை. அ0.)

† இது பகற்குறி நேர்வாள்போல் இரவுக்குறி விலக்கியது எனக்கொள்வர் **நச்சினார்க்கினியரும்.** (தொல். களவு, உங.)

கதறிப் பொறையுயிர்த்த முத்தங்கள் செறிந்த இருளை இடங்களினின்றுஞ் சேயாநிற்கும்: திரைகொணர்ந்து போதவிட்டனவற்றைக் கண்டார் வான்று நின்ற பாக்கத்தின்கண் ; எ-று. (கஅ)

ருO திமில்களி றாகத் திரைபறையாப் பல்புட்
டுயில்கெடத் தோன்றும் படையாத்—துயில்போற்
குறியா வரவொழிந்து கோலநீர்ச் சேர்ப்ப
நெறியானீ கொள்வது நேர்.

எ-து தோழி வரைவுகடாயது.

இ—ள். * திமிலே களிறாகத் திரையே பறையாகத் துயில்கெடத்தோன்றும்படை புட்களாகக், கனாக்கண்டாற்போலத் தேறமுடியாத களவின் கட்டனியேவரும் வரவினை யொழிந்து, கோலநீர்ச்சேர்ப்பனே! நெறியானே வரைந்து இவளைக்கொள்வது நினக்குத்தகுதி ; எ-று. (கக)

ருக கடும்புலால் வெண்மணற் கானலுறு மீன்கட்
படும்புலால் பார்த்தும் பகர்து—மடும்பெலாஞ்
சாலிகை போல்வலை சாலப் பலவுணங்கும்
பாலிகை பூக்கும் பயின்று.

எ-து தலைமகற்குத் தோழி துறைநேர்ந்து பகற்குறியிடமறியச் சொல்லியது.

இ-ள். கடும்புலாலையுடைய வெண்மணற் றண்கழிக்கானலின்கண் இருந்து, யாங்களாங்கடுத்த மீனுகிய படுபுலாலின்கட் புட்டிரியாமற்பார்ப்பேம் : அவற்றை விற்பதுஞ்செய்வேம் ; அக்கானலின்கண் அடும்பெல்லாம் பாலிகைபோலப் பூக்கும்:† சாலிகை விரிந்தாற்போல வலைகளும்உணங்கும்; எ-று

ருஉ திரைபாக னாகத் திமில்களி றாகக்
கரைசேர்ந்த கானல் படையா—விரையாது
வேந்து கிளர்ந்தன்ன வேலைநீர்ச் சேர்ப்பநா
ளாய்ந்து வரைத லறம்.

எ-து தலைமகனைத் தோழி வரைவுகடாயது.

இ-ள். திரையே பாகனாகத் திமிலேகளிறாகக் கரைசேர்ந்த கானலின் கண்ணுள்ள பலபுட்களே படையாக வேந்துகிளர்ந்தன்ன வேலைநீர்ச்சேர்ப்ப

---

* திமில் - மீன்படகு.

† சாலிகை - மெய்புகுகருவி.

னே! விரையாதே நல்லநாளாராய்ந்தறிந்து வரைந்திவளைக்கோடல் நினக்கற மாவது ; எ-று. (உக)

ருங பாறு புரவியாப் பல்களிறு நீடிமிலாத்
தேறு திரைபறையாப் புட்படையாத்—தேரூத
மன்கிளர்ந்த போலுங் கடற்சேர்ப்ப மற்றெமர்
முன்கிளர்ந் தெய்தன் முடி.

இதுவுமது.

இ-ள். பாறே குதிரையாக நீண்டதிமிலே பலகளிறுகளாகத் தெளிந் த திரையே பறையாகப் புட்களே படையாகத் தேரூத வேந்துகள் படை யெழுந்து கிளர்ந்தனபோலுங் கடற்சேர்ப்பனே! எமருடைய முன்னேசெ ன்று இவளை நீயே புணர்தலை முடிப்பாயாக ; எ-று. (உஉ)

ருச வாராய் வரினீர்க் கழிக்கான னுண்மணன்மேற்
றேரின்மா காலாழுந் தீமைத்தே—யோரிலோர்
கோணுடல் வேண்டா குறியறிவார்க் கூஉய்க்கொண்டோர்
நாணுடி நல்குத னன்று.

இதுவுமது.

இ-ள். வாராதொழிவாயாக : வருவையாயின் நீர்க்கழிக்கானல்தான் நுண்மணன்மேல் நின்றேர் பூண்ட குதிரை காலாழுந்தீமையுடைத்தாத லான் ; ஒத்தகுலத்தார்க்குத் தொடர்ச்சிசோடலை ஐயுற்றாராய்தல்வேண்டா: நிமித்தமறிவாரையழைத்து நல்லதொருநாளை நாடி இவட்குநல்குதல் நன்று; எ-று. (உங)

ருரு கண்பரப்ப காணுய் கடும்பனி கால்வறேர்
மண்பரக்கு மாயிருண் மேற்கொண்டு—மண்பரக்கு
மாறுநீர் வேலைநீ வாரல் வரினாற்று
ளேறுநீர் வேலை யெதிர்.

இதுவுமது.

இ-ள். இவளுடைய கண்களும் மிக்கநீர்பரப்பகாணுய்: கால்வலிய தே ரில் மண்ணெல்லாம் பரக்கும் பெரிய இருண்மேற்கொண்டு உலகமெல்லாம் நிவந்த அலர்பரக்குமாறு, நீருண்ட வேலையுடையாய்! வாரல்: வருவையாயின் இவளுயிர் வாழாள், ஓதமேறுநின்ற நீர்வேலையினெதிரே: எ-று. (உச)

ருசு கடற்கானற் சேர்ப்ப கழியுலாஅய் நீண்ட
வடற்கானற் புன்னைதாழ்ந் தாற்ற—மடற்கான
லன்றி லகவு மணிநெடும் பெண்ணைத்தெம்
முன்றி லிளமணன்மேன் மொய்த்து.

எ-து தலைமகற்கு இரவுக்குறிநேர்ந்த தோழி இடங்காட்டியது.

இ-ள். கடற்கானற்சேர்ப்பனே! கழிகள்சூழ்ந்து நீண்ட மீன் கொலைகளையுடைய கானலின்கண் மிகவும்புன்னை தழைக்கப்பட்டு, பூவிதழையுடைய இக்கானலின்கண் உள்ள அன்றில்கள் அழையாநின்ற அழகியநெடிம்பெண்ணையையுடைத்து, எம்மில்லத்தின்முன் இளமணல்களும் மொய்த்து; எ-று.

ருஎ வருதிரை தானுலாம் வார்மணற் கான
லொருதிரை யோடா வளமை—யிருதிரை
முன்வீழுங் கானன் முழங்கு கடற்சேர்ப்ப
வென்வீழல் வேண்டா வினி.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். வருதிரை தான்வந்து உலவாநின்ற ஒழுகிய மணற்கானலின்கண் ஒருதிரைவந்து பெயர்வதற்குமுன்னே இரண்டுதிரைவந்து வீழாநின்ற கானலின்கண் வந்து முழங்குகடற்சேர்ப்பனே! என்னால் வந்து இப்புணர்ச்சியை விரும்பல்வேண்டா; இனிவரைந்து கொள்வாய்; எ-று. (உசு)

ருஅ மாயவனுந் தம்முனும் போலே மறிகடலுங்
கானலுஞ்சேர் வெண்மணலுங் காணாயோ—கான
லிடையெலா ஞாழலுந் தாழையு மார்ந்த
புடையெலாம் புன்னை புகன்று.

எ-து தலைமகற்குத் தோழி பகற்குறிநேர்ந்து இடங்காட்டியது.

இ-ள். மாயவனும் அவன் முன்னோனும் போல, மறிகடலும் கடற்சோலையும் அச்சோலையைச்சேர்ந்த வெண்மணலும் பாராயோ? அக்கடற்சோலையின் நடுவெல்லாம் ஞாழலுந் தாழையுமாயிருக்கும்: நிறைந்த மருங்கெல்லாம் புன்னையாயிருக்கும்: இவற்றையும் விரும்பிப்பாராய்; எ-று.

ருகூ பகல்வரிற் கவ்வை பலவாம் பரியா
திரவரி னேதமு மன்ன—புகவரிய

* "இரவுக்குறி யிடங்காட்டித் தோழி கூறியது" என்றார் நச்சினார்க்கினியநம். (தொல் கள, உங.)

தாழை துவளுந் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே
யேழை நுளைய ரிடம்.

எ-து இப்பொழுது வாரலென்று வரைவுகடாயது.

இ-ள். பகல் வருவாயாயின் அலர் பலவுமுளவாம்; அவ்வலர்க்கு இரங்காதே இரவுவருவையாயின் ஊறுவரும்: ஏதமும் பலவுளவாம்; உள்புகுதற்கரிய தாழையடர்ந்த திரைநீர்ச் சேர்ப்பையுடைத்து, எங்கள் ஏழைநுளையர் வாழுமிடம்; எ-று. (உஅ)

சுo திரையலறிப் பேராத் தெழியாத் திரியாக்
கரையலவன் காலினாற் காணுக்—கரையருகே
நெய்தன் மலர்கொய்யு நீணெடுங் கண்ணினாண்
மைய னுளையர் மகள்.

எ-து பாங்கற்குத் தலைமகன் கூறியது.

இ-ள். திரைகள் அலறிப்பெயரும்வகை தெழித்துத்திரிந்து கரையின்கண் அலவன்களைத் தன் காலினாலாராய்ந்து, கரையருகே நின்ற நெய்தன் மலர்களைக் கொய்யாநிற்கும் நீளிய நெடுங்கண்ணினாள் நுளையருடைய மையன் மகள்; எ-று. (உகூ)

சுக அறிகரிதி யார்க்கு மரவநீர்ச் சேர்ப்ப
நெறிதிரிவா ரின்மையா வில்லை—முறிதிரிந்த
கண்டலந்தண் டில்லை கலந்து கழிசூழ்ந்த
மிண்டலந்தண் டாழை யிணைந்து.

எ-து தலைமகற்குத் தோழி இரவுக்குறிமறுத்தது.

இ-ள். யார்க்கும் அறிதலரிது, ஓசையையுடைய நீர்ச்சேர்ப்பனே! எங்குந்திரிவாரில்லாமல் வழியில்லை: தளிர் சுருண்டிருந்த கண்டலும், அழகிய தண்டில்லைகளும், தம்முண் மிடைந்து கழியைச் சூழ்ந்த மிண்டன் மரங்களும், தாழைகளும் இடைப்பட்டு; எ-று. (௩o)

சுஉ வில்லார் விழவினும் வேலாழி சூழுலகி
னல்லார் விழவகத்து நாங்காணே—நல்லா
யுவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனைப் பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்.

எ-து தலைமகளை ஒருநாட் கோலஞ்செய்து அடியிற்கொண்டு முடிகாறு நோக்கி 'இவட்குத் தக்கான் யாவனுவன்கொல்லோ' என்றாராய்ந்த செவிலிக்குத் தோழி அறத்தொடுநின்றது.

இ-ள். வில்லுழவர் காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் நல்லாராகிய வனிதையர் காரணமாகத் தொடங்கிய விழவகத்தும் எல்லா மாந்தருந்திரள்வராதலால், நாங்கள் அங்குக் கண்டறியேம், எமக்கு ஒருதவி பண்டொருநாட் செய்த சேர்ப்பனேடொப்பானை; மற்றவனே இவட்குத்தக்கான்: அவனைப்போலும் ஆடவர் சுவர்க்கத்துளராயின் ஆராய்வாய்; எ-று.

உவர்க்கம் என்பது கடற்கரை. வேலாழி என்பது கடல். (நூக)

நெய்தன் முற்றிற்று.

---

## ரு—பாலை.

சுரு எரிநிறநீள் பிண்டி யிணரின மெல்லாம்
வரிநிற நீள்வண்டர் பாடப்—புரிநிறநீள்
பொன்னணிந்த கோங்கம் புணர்முலையாய் பூந்தொடித்தோ
ளென்னணிந்த வீடில் பசப்பு.

எ-து தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

இ-ள். எரிநிறத்தையுடைய அசோகின் பூங்கொத்தினமெல்லாம்: வரிநிறத்தையுடைய வண்டுகள் இளியென்னும் பண்ணைப்பாட விரும்பப்படுகின்ற நீண்ட மிக்க பொன்போன்ற மலர்களையணிந்தன, கோங்கமெல்லாம்: ஆதலாற் பொருந்திய முலையினையுடையாய்! நின்னுடைய பூந்தொடித் தோள்கள் யாதின் பொருட்டு அணிந்தன? தமக்குத் தகுதியில்லாத பசப்பினை; எ-று. (க)

சுச பேணு யிதன்றிறத் தென்றாலும் பேணாதே
நாணு நல்வளையாய் நாணின்மை—காணு
யெரிசிதறி விட்டன்ன வீர்முருக் கீடில்
பொரிசிதறி விட்டன்ன புன்கு.

இதுவுமது.

இ-ள். 'நீ யுறுகின்ற துன்பத்தைப் பாதுகாவாய்' என்று யான் சொன்னாலும் பாதுகாவாதே நாணத்தகும் ஆற்றாமை செய்த நல்வளையாய்! நீயு முன்பு நாணின்மை செய்தாயென்பதனை இனியறிந்து கொள்ளாய்; எரியைச்

சிதறிவிட்டாற் போலவிருந்த, ஈர்முருக்குக்கள்: கனமில்லாத பொரி சிதறி விட்டாற் போலப் பூத்தன, புன்குகள்: ஆதலான் அவர் சொல்லிய பருவம் இது காண்; எ-று. (உ)

சுடு தான்றாயாக் கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
வீன்றாய்நீ பாவை யிருங்குரவே—யீன்றாண்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென் று வந்து.

எ-து சுரத்திடைச் சென்ற செவிலித்தாய் குரவோடு புலம்பியது.

இ-ள். கோங்கந் தான் தாயாகத் தாழ்ந்து முலை கொடுத்து வளர்ப்ப நீ பாவையினையீன்ற இத்துணையேயாதலான், இருங்குரவே! யானீன்றாள் நினக்குச் சொல்லிய சொல்லை யெனக்குச் சொல்லாயாயினும் முள்ளெயிற் றாள் போயினவழியையாயினும் சொல்லிக்காட்டாய் வந்து இது என்று; எ-று. (ங)

சுசு வல்வருங் காணாய் வயங்கி முருக்கெல்லாஞ்
செல்வர் சிறார்க்குப்பொற் கொல்லர்போ—னல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றாலி பாஅய்த்
திகழக்கான் றிட்டன தேர்ந்து.

எ-து தோழி பருவங் காட்டி வற்புறுத்தியது.

இ-ள். நங்காதலர் விரைந்து வருவர்: விளங்கி முருக்குக்களெல்லாம், செல்வமுடையார் புதல்வர்க்குப் பொற்கொல்லர் ஐம்படைத்தாலி செய்தாற் போல, மிக்க பவளக்கொழுந்தின் அடியிலே பொற்றாலியைப் பதித்து வைத் தாற்போல்விளங்கக் கான்றன: ஆதலாற் றேர்ந்து பாராய்; எ-று. (ச)

சுஎ வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றாற்பொறுக்க லாமோ—வொறுப்பபோற்
பொன்னு ளூறுபவளம் போன்ற புணர்முருக்க
மென்னு ளூறுநோய் பெரிது.

எ-து பருவங்கண்டு ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். மிக்க பொருட்பொருட்டுச் சென்றார், விளங்கிழையாய்! வந்து தோன்றுகின்றிலர்; இப்பருவத்தின்கண் நீயென்னை ஆற்று என்றால் எனக்கு ஆற்றலாமோ? என்னை ஒறுப்பனபோலப் பொன்னின் உள்ளூறவைத்த பவ ளம்போன்ற, பொருந்தியமுருக்கம்பூக்கள் ; ஆதலால் என்னுள்ளத்துற்ற நோய் பெரிது ; எ-று. (ரு)

௨௦௫. வரன்முறை பிறழ வுறுப்பு மயங்கி
மிக்குங் குறைந்தும் வருவது கொச்சக
வொருபோ காமென வுரைத்தனர் புலவர். (௩௬)

௨௦௬. * கொச்சகத் தன்மையிற் கொச்சக மென்ப. (௩௭)

௨௦௭. தேவப் பிரணவ மெனும்வட மொழியைத்
தேவ பாணியெனத் திரித்துவழங் கினரே. (௩௮)

௨௦௮. தேவ பாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலைந்த சென்னி
நீர்நில மளந்த நெடியோன் மேற்றே. (௩௯)

௨௦௯. சுடர்கதிர்த் திங்கள் சூடி யோற்கும்
படர்திரைப் பனிக்கடன் மாதடிந் தோற்கு
முரிய காலமு முளவென வொழிப. (௪௦)

௨௧௦. வேந்தன் வேண்டு நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியு மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர். (௪௧)

## ௫—கலம்பகம்.

௨௧௧. சொல்லிய கலம்பகஞ் சொல்லி லொருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே

---

* 'கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்: அதுபோல, ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சக மெனப்படும்' (தொல், செய், ௧௨௧) எனவும், 'இனிக் கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர்: என்னை? பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக்கொச்சகமென்ப; அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்றாராகலினென்பது. இக்காலத்தார் அதனைப்பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கிக்கொய்சகமென்று சிதைத்தும்வழங்குப. (௸, ௸ ௧௫௩) எனவும் **பேராசிரியரும்**, "பலகோடுபட அடுக்கியுடுக்கும்உடையினைக்கொச்சக மென்பவாகலின் அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியும் வருஞ் செய்யுளைக் கொச்சகமென்றார். இது ஒப்பினாகியபெயர். இக்காலத்து இது மகளிர்க்குரியதாய்க் கொய்சக மென்றுவழங்கிற்று" (௸, ௸, ௸) என **நச்சினார்க்கினியரும்** கூறியவாற்றானறிந்துகொள்க. இனிக் கொச்சைத்தன்மையினென்பதூஉம் பாடம். "கொச்சகமராகம்" (தொல், செய், ௧௨௧) என்பதனுரையில் "சிறப்பிலதனைக்கொச்சையென்று கூறும் வழக்கு நோக்கி இதனையும் சிறப்பின்மையாற் கொச்சகமென்றா ரென்பாருமுளர்" என அந்நச்சினார்க்கினியரே கூறினார்.

யம்மனை யூசல் யமகங் களிமறஞ்
சித்துக் கால மதங்கி வண்டே
கொண்டன் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
புறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்த
மாதி யாக வருமென மொழிப. (சஉ)

உகஉ. தேவர்க்கு முனிவர்க்குங் காவ லரசர்க்கு
நூறு தொண் ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பி லெழுப தமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள். (சங)

சூ—உலா.

உகங முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி. (சச)

உகச பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையு
மொத்த காமத் திணையாள் வேட்கையுங்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி * நடப்பது † கலிவெண் பாட்டே.

பொய்கையார். (சரு)

உகரு பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்

---

* 'நடப்பினது' பி-ம்.

† "இனி யொருபொருணுதலாது திரிந்து வருங் கலிவெண்பாட்டும் ஈண்டுக்கூறிய நெடுவெண்பாட்டோ டொருபுடை ஒப்புமையின் அக்கலி வெண்பாட்டாக இக்காலத்தார் கூறுகின்ற உலாச்செய்யுளும் புறப்புறக் கைக்கிளைப் பொருட்டாதல் ஒன்றெனமுடித்தல் என்னு முத்தியாற் கொள்க. அவ்வுலாச் செய்யுளிரண்டுறுப்பாயும் வெண்பாவிற் கெட்டும் வருதலிற் கலிவெண்பாவின் கூறும். இக்காலத்து அதனை ஒருறுப்பாகச் செய்து செப்பலோசையாகவுங் கூறுவர். அது துள்ளலோசைக்கே யேற்குமாறுணர்க" (தொல், செய், கக௮) எனவும், "அது திருவுலாப்புறத்துள் 'வாமான வீசன் வரும்' (சேரமான் பெருமாணுயனுர் ஞானவுலா) எனமுடித்து மேல் வேறோருறுப்பாயவாறும் ஒழிந்தவுலாக்களுள் வஞ்சியுரிச்சீர் புகுந்தவாறும் அடிவரையறையின்மையும்" (ஷை, ஷை, கசூக) எனவும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே. (சசு)

உகசு குடிநெறி மரபு கொளல்கொடை விடிய
னன்னீ ராட னல்லணி யணித
ஞென்னக ரெதிர்கொள னன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும். (சஎ)

உகஎ ஆதி நிலையே குழாங்கொள லென்றெடுத்
தோதிய புலவரு முளரென மொழிப. (சஅ)

உகஅ ஏழு நிலையு மியம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாத
ஞேக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே. (சகூ)

உககூ பேதைக் கியாண்டே யைந்துமுத லெட்டே. (ருo)

உஉo பெதும்பைக் கியாண்டே யொன்பதும் பத்தும். (ருக)

உஉக மங்கைக் கியாண்டே பதினொன் றுமுதலாத்
திரண்ட பதினு லளவுஞ் சாற்றும். (ருஉ)

உஉஉ மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படு மொன்பதிற் றிரட்டி செப்பும். (ருங)

உஉங அரிவைக் கியாண்டே யறுநான் கென்ப. (ருச)

உஉச தெரிவைக் கியாண்டே யிருபத் தொன்பது. (ருரு)

உஉரு ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது
பேரிளம் பெண்டுக் கியல்பென மொழிப.
பொய்கையார். (ருசு)

உஉசு காட்டிய முறையே நாட்டிய வாண்பாற்
கெல்லையும் பெயரு மியல்புற வாய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரு முளரே. (ருஎ)

உஉஎ பாலன் யாண்டே யேழென மொழிப. (ருஅ)

உஉஅ மீளி யாண்டே பத்தியை காறும். (ருகூ)

உஉகூ மறவோன் யாண்டே பதினான் காகும். (சுo)

உ௬0 திறலோன் யாண்டே பதினேந் தாகும். (௬௧)

உ௬௧ பதினு றெல்லை காளைக் கியாண்டே. (௬௨)

உ௬௨ அத்திற * மிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகு மிகினே முதுமகன்.
அவிநயனர். (௬௩)

உ௬௩ நீடிய நாற்பத் தெட்டி னளவு
மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப. (௬௪)

உ௬௪ சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளை யாட்டே
நன்மது நுகர்த லின்ன பிறவு
மவரவர்க் குரிய வாகு மென்ப. (௬௫)

உ௬௫ வேந்தர் கடவுளர் விதிநூல் வழியுணர்
மாந்தர் கலிவெண் பாவிற் குரியர். (௬௬)

உ௬௬ நாலு வருணமு மேவுத லுரிய
வுலாப்புறச் செய்யுளென் றுரைத்தனர் புலவர்;
அவிநயனர். (௬௭)

## எ.—சின்னப்பூ.†

உ௬௭ மலையும் யாறு நாடு மூரும்
பரியுங் களிறுங் கொடியு முரசுந்
தாரும் பெயரு மெனத்தெரி பத்துஞ்
சொல்லு மெல்லையின் முதற்குறட் கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப்
பின்னர்க் குறளுட் பாட்டுடைத் தலைவ
ரியற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றுஞ்

---

* 'மியன்ற' பி-ம்.

† "வழக்கொடு சிவணிய வகைமை யான" (தொல். புற. ௩௧) என்பத னுரையில் நச்சினார்க்கினியர் "சிவணியவகைமை' என்றதனுனே முற்கூறிய வற்றோடே நாடும், ஊரும், மலையும் யாறும் படையுங் கொடியுங் குடையும் முரசும் நடைநவில்புரவியும்' களிறுந் தேருந் தாரும் பிறவும் வருவனவெல் லாங் கொள்க. இவற்றுட் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ என்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க" என்பர்.

செயல்பெற வைப்பது சின்ன மதுவே
யாதிப் பாவின ததனினம் வருமே. (சூஅ)

உருஅ மலையே யாறே நாடே யூரே
பறையே பரியே †களிறே தாரே
‡பெயரே கொடியே யென்றிவை தசாங்கம். (சூகூ)

உருகூ பத்தே யேழே மூன்றே சின்னம். (எ0)

அ.—பரணி.

உச0 மயக்கறு கொச்சகத் தீரடி யியன்று
நயப்புறு தாழிசை யுறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த வுழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழன் *மன்னனை
வெம்புசின மாற்றான் றானைவெங் களத்திற்
குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்
†தொருதனி யேத்தும் பரணியது பண்பே. (எக)

உசக தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி யமருங் காளி கோயில்
கன்னியை யேத்த லலகை வினோதங்
கனநிலை நிமித்தம் பசியே யோகை
பெருந்தேவி பீட மழகுற விருக்க
வமர்நிலை நிமித்த மவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையு மளவு
மரபினி துரைத்தன் மறக்களங் காண்டல்
செருமிகு களத்திடை யடுகூழ் வார்த்தல்
பரவுத லின்ன வருவன பிறவுந்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே. (எஉ)

உசஉ யானை சாய்த்த வடுகளத் தல்ல
தியாவரும் பெறுஅர் பரணிப் பாட்டே. (எ௩)

---

† களிறொழித்துப் படைகோடலுமுண்டு. அவ்வாறு திருவாசகத்துள்ள திருத்தசாங்கத்துக் காண்க.

‡ பெயரை ஆணை என்பாருமுளர். (இலக்கணவிளக்கப்பாட்டியல்-உஉ)

* 'மன்னன்' எனவும், † 'தொருவற்போற்றும்' எனவும் பி-ம்.

உ௪௩ ஏழ்தலைப்பெய்த நூறுடை யிபமே
யடுகளத் தட்டாற் பாடுதல் கடனே. (எ௪)

### ௯.—மடல்.

உ௪௪ அறம்பொருள்*வீடு திறம்பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைமக னியற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபி னந்த வொண்டொடி யேத்தன்
மற்றவன் வடிவை யுற்ற கிழியெழுதிக்
காமங் கவற்றக் கரும்பனை மடன்மா
வேறுவ ராடவ ரென்றனர் புலவர். (எ௫)

உ௪௫ மடன்மாப் பெண்டி ரேறா ரேறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலே. (எ௬)

உ௪௬ கடவுளர் மேற்றே காரிகை மடலே. (௭எ)

உ௪எ எந்தை யுடைப்பெயர்க் கெதுகை சாற்றி
யந்தமி லின்பம் பொருளா வேத்திப்
பொருளு மறனும் வீடும் பழித்து
மடன்மா வேறுதன் மாதர்க் குரித்தே.* (எஅ)

### ௧0.—மறம்.

உ௪அ பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
யொருபெருந் தூத னுரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் †வெஞ்சினந் திருகி
மாற்றமிக வுரைப்பது மறமென மொழிப. (எ௯)

### ௧௧.—பல்சந்தமாலை.

உ௪௯ சொன்ன கலம்பக வுறுப்புவகை நீக்கி
மன்னிய பத்து முதனூ றளவா

---

* இவ்வாறு வந்தன மங்கையர்கோன் அருளிச் செய்த பெரியதிருமடல் சிறியதிருமடல் என்பன.

† 'வெஞ்சின வஞ்சின' பி-ம்.

வந்த மரபின் வரூஉஞ்செய்புண் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும். (௮0)

௧௨.—இணைமணிமாலை.

௨௫0 இணைமணி மாலை தணிவிலந் தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
றுறையு மியைந்தீ ரைம்பது வருமே. (௮௧)

௨௫௧ வெண்பாக் கலித்துறை யீரிரண் டியைந்த
வொண்பா நூறவை யிணைமணி மாலை.* (௮௨)

௧௩.—இரட்டைமணிமாலை.

௨௫௨ வெண்பா முதலாக் கலித்துறை பின்வரு
மிந்த விருப திரட்டைமணி மாலை. (௮௩)

௨௫௩ ஆதியந்தம் வெண்பாக் கலித்துறை
யேதமின்றி வருவ திரட்டைமணி மாலை
யதுவே நாலைந் தியலு மென்ப. (௮௪)

௧௪.—மும்மணிமாலை.

௨௫௪ மிகுத்தவெள்ளை கலித்துறையகவல்
விருத்த மும்மணி விளம்புமந் தாதி.† (௮௫)

௧௫.—நான்மணிமாலை.

௨௫௫ வெண்பாக் கலித்துறை யகவல் விருத்த
நண்பாய் வருவது நான்மணி மாலை. (௮௬)

௨௫௬ ‡அகவலு மகவல் விருத்தமு மாற்ப
தகவலை முன்வைத் தறைவது கடனே. (௮௭)

௨௫௭ வெள்ளை கலித்துறை யகவல் விருத்தங்
கொள்வது நான்மணி ¶கோத்தவந் தாதி. (௮௮)

---

* வெண்பாவகவலிணைமணிமாலையுங் கொள்வர் இலக்கணவிளக்கப்பாட்டியலார்.

† 'மாலையந்தாதி' பி-ம்.

‡ இதற்கு அளவு முப்பது.

¶ வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் எனத்தொடுப்பர் பிற்காலத்தார்.

### கச.—கலம்பகமாலை.

உருஅ ஒருபோ குடனம் மனைநனி நீக்கி
வெள்ளை முதலா வெல்லா வுறுப்புந்
தள்ளா வியலது கலம்பக மாலை. (அகூ)

உருகூ ஒருபோ கம்மனை யொழித்துவெண் பாமுதற்
கருதிய பெயரது கலம்பக மாலை. (கூ0)

### கஎ—மும்மணிக்கோவை.

உகூ0 வெள்ளையு மகவலு நேரிசை யாகக்
கலித்துறை வரவந் தாதி யாகி
முறைமையி னியல்வது மும்மணிக் கோவை. (கூக)

உகூக தோன்றிய வகவல் வெள்ளை கலித்துறை
மூன்றும் வருவது மும்மணிக் கோவை.* (கூஉ)

உகூஉ மும்மூன் றொருபொருண் மிசைவரு மென்ப. (கூங)

### கஅ—கலியந்தாதி.

உகூங வல்லின மெல்லின மிடையின வெழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனிற் குறிலே நெடிலெனி னெடிலே
பொருந்தி நாற்கலை கொண்டோ ரடியாய்த்
திருந்து மிவ்வகை நான்கடி யாகியு
மோரொலி யாகியு மெண்ணான் காகிய
கலையொடு பொருந்தியுங் குறிலு நெடிலு
முறைமுதல் வரினு மவ்வெழுத் தாகியு
மிப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும். (கூச)

உகூச வெண்கலி யுஞ்சில சிறுபான்மை வருமே. (கூரு)

### ககூ.—ஒலியந்தாதி.

உகூரு தத்த மினத்தி லொப்புமுறை பிறழாது

---

* இதற்கும் அளவு முப்பது. இஃது ஆசிரியம் வெண்பாக் கலித்துறை யாகவருமெனவும், மும்மணிமாலை வெண்பாக் கலித்துறை ஆசிரியவிருத்த மாக வருமெனவுங் கொள்க.

உ

திருச்சிற்றம்பலம்.

# மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1903-ஞ நவம்பர்மீ 14 தேதியிலும், டிஸம்பர்மீ 8 தேதியிலும் இச்சங்கத்தார் நடாத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷை யில் தேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும், மாணுக்கர்களின் விவரம்.

## பி. ஏ. பரீக்ஷை.

### I. வகுப்பு.

1 ஏ. பூமிநாதன், கிருஸ்துவகாலேஜ், சென்னை, (I) 50ரூபாபெறத்தக்க தங்கப் பதக்கப் பரிசும் யோக்கியதாபத்திரமும்.

2 ஜி. தாதாசாரி, கவர்ண்மெண்டு காலேஜ், கும்பகோணம், (II) 45ரூபாவும் யோக்கியதாபத்திரமும்.

### II. வகுப்பு.

3 வி. சோமசுந்தரம், கிருஸ்துவகாலேஜ், சென்னை, யோக்கியதாபத்திரமட்டும்.

4 வி. எஸ். சீனிவாஸராகவன், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை, ,,

5 வி. ராஜகோபாலன், ஷை ,,

6 டி. எஸ். கிருஷ்ணன், செண்டுஜோஸப் காலேஜ், திருச்சி, ,,

7 டி. இ. ராஜகோபாலாச்சாரியார், ராஜதானி காலேஜ், சென்னை, ,,

8 கே. எஸ். சாரங்கபாணி அய்யங்கார், எஸ். பி. ஜி. காலேஜ், திருச்சி, ,,

9 எஸ். நாராயணசாமி, ஷை ,,

## எப். ஏ. பரீக்ஷை.

### I. வகுப்பு.

1 வி. யம். கலியாணசுந்தரம்பிள்ளை, ஸி.யம்.யஸ். காலேஜ், திருநெல்வேலி, (I)40 ரூபாபெறத்தக்க தங்கப்பரிசும் யோக்கியதாபத்திரமும்.

2 லா. தா. ராமச்சந்திரன், செண்டு ஜோசப் காலேஜ், திருச்சி, (II) 35 ரூபாவும் யோக்கியதாபத்திரமும்.

3 வி. நஞ்சுண்டான், சேலம் காலேஜ், சேலம், (III.)30 ரூபாவும் யோக்கியதாபத்திரமும்.

### II. வகுப்பு.

4 பி. ஆர். மீனாக்ஷிசுந்தரம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி, யோக்கியதாபத்திர மட்டும்.

5 பி. வெங்கட்டரமணன், சேலம்காலேஜ், சேலம், ,,

6 சு. கணேசன், செண்டு ஜோசப் காலேஜ், திருச்சி, ,,

7 யஸ். கிருஷ்ணையங்கார், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, ,,

8 நா. ரே. சுந்தரமையர், செண்டு ஜோசப் காலேஜ், திருச்சி, ,,

9 பாப்பம்மாள் புஷ்பவதி மாசிலாமணி, டவிடெண்ட் பொரோடெஸ்டண்டு காலேஜ், சென்னை, ,,

10 ஜி. கே. முத்துசாமிஐயர், செண்டுஜோசப்காலேஜ், கூடலூர், ,,

11 பெ. குமாரசாமி, செண்டு மைக்கீல் காலேஜ், கோயம்புத்தூர், ,,

12 ஆர். ஞானப்பிரகாசம், செண்டு ஜோசப் காலேஜ், கூடலூர், ,,

13 டி. கே. வேம்பு ஐயர், ஷை ,,

14 எ. வி. வெங்கட்டரமணன், பச்சையப்பன்காலேஜ், சென்னை, ,,

15 எ.வி.வரதராஜன், பிரசிடென்சிகாலேஜ், சென்னை, ,,

16 விஸ்வநாதையர், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, ,,

17 யஸ். சாரங்கபாணி, கெவர்ண்மெண்டு காலேஜ், கும்பகோணம், ,,

| | | |
|---|---|---|
| 18 | ஜி. மேரி ஐசக், மகாராஜாஸ் காலேஜ், திருவனந்த புரம், | யோக்கியதாபத்திரம். |
| 19 | வி. வி. அப்பாத்துரை அய்யங்கார், இந்துகாலேஜ், திருநெல்வேலி, | ,, |
| 20 | ஏ. கிருஷ்ணசாமி அய்யர், பச்சயப்பன் காலேஜ், சென்னை, | ,, |
| 21 | வி. யம். சுந்தரராஜன், இந்து காலேஜ், திருநெல் வேலி, | ,, |
| 22 | தன்வந்திரிசுப்பராவ், கிறிஸ்துவ காலேஜ், செ ன்னை, | ,, |
| 23 | ப. ரத்தினசபாபதி, செயிண்டு மைக்கேல் காலே ஜ், கோயம்புத்தூர், | ,, |
| 24 | வி. வெங்கட்ட ராவ், சர்ச் ஆப் ஸ்காட்டுலாண்டு மிஷன் காலேஜ், சென்னை, | ,, |
| 25 | யன். சிவசாம்பன், சர்ச் ஆப் ஸகாட்டுலாண்டு மிஷ ன் காலேஜ், சென்னை, | ,, |
| 26 | யல். ஏ. நீலகண்டசர்மா, செயிண்டு ஜோசெப் கா லேஜ், திருச்சி, | ,, |
| 27 | டி. பி. கிருஷ்ணசாமி, கிறிஸ்துவ காலேஜ், செ ன்னை, | ,, |
| 28 | ஜி. யந். சுந்தரராஜலு, யஸ். பி. ஜி. காலேஜ், திரு ச்சி, | ,, |
| 29 | யஸ். வி. ராமசாமி, நேட்டிவ் காலேஜ், மதுரை, | ,, |
| 30 | வி. சீனிவாசன், செண்டுஜோசெப் காலேஜ், திரு ச்சி, | ,, |
| 31 | வெ. நரசிங்க ராவ், சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷ ன் காலேஜ், சென்னை, | ,, |
| 32 | கே. யஸ். முத்துக்கிருஷ்ணன், செண்டு ஜோசெ ப் காலேஜ், திருச்சி, | ,, |
| 33 | டி. யஸ். சுப்பய்யா பிள்ளை, இந்து காலேஜ், திரு நெல்வேலி, | ,, |
| 34 | சி. ஆர். வெங்கட்டநாராயணன், சேலங் காலேஜ், சேலம், | ,, |

# மெட்ரிகுலேஷன் பரீக்ஷை.

## I. வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | வி. யம். சுப்பய்யா பிள்ளை, சி. யம். யஸ். காலேஜ், திருநெல்வேலி, | —(I) ரூ 30-ல் ரூ 5 பெறத்தக்க வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும், யோக்கிய தாபத்திரமும். |
| 2 | யஸ். யஸ். ராமஸ்வாமி, பத்தமடை ஐஸ்கூல், பத்தமடை, | (II) 25 ரூபாவும் யோக்கியதாபத்திரமும். |
| 3 | டி. மாணிக்கா(பெண்)அமெரிக்கன் மிஷன் பெண்பாடசாலை, மதுரை, | (III) 20 ரூபாவும் யோக்கியதாபத்திரமும். |
| 4 | யஸ். சூரியநாராயணன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை, | (IV)15 ரூபாவும் யோக்கியதாபத்திரமும். |
| 5 | ஆ. ராகவையர், சர்ச் ஆப்ஸ்காட்லண்டு மிஷன் காலேஜ், சென்னை, | (V) 12 ரூபாவும் யோக்கியதாபத்திரமும். |
| 6 | சி. வீரராகவன், இந்து காலேஜ், திருநெல்வேலி, | யோக்கியதாபத்திர மட்டும். |

## II. வகுப்பு.

| | | |
|---|---|---|
| 7 | பி. யன். நாகநாதன், அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், மதுரை, | யோக்கியதாபத்திர மட்டும். |
| 8 | யன். ரெகுநாதன், பிண்டுலே காலேஜ், மன்னார்குடி, | ,, |
| 9 | டி. ஜெயமணி(பெண்)அமெரிக்கன் மிஷன் பெண்பாடசாலை, மதுரை, | ,, |
| 10 | வி. பாலசுந்தரம், கூடலூர் காலேஜ், கூடலூர், | ,, |
| 11 | ஆர். கிருஷ்ணன், இந்து காலேஜ், திருநெல்வேலி, | ,, |
| 12 | எ. வி. அருணாசலம், செண்டு ஜோசெப் காலேஜ், கூடலூர், | ,, |
| 13 | ஜி. ராமச்சந்திரஞ் செட்டி, முத்யாலுபேட்டை ஹைஸ்கூல், சென்னை, | ,, |
| 14 | யஸ். சுப்பிரமணியன், மகாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை, | ,, |
| 15 | ஆர்.கிருஷ்ணசாமி,போர்ட்ஹைஸ்கூல்,திருவாரூர், | , |

16 கே. கிருஷ்ணன், பத்தமடை ஹைஸ்கூல், பத்த மடை, ,,
17 சி. சேஷாத்திரி, யஸ். பி. ஜி. ஹைஸ்கூல், இராம நாதபுரம், ,,
18 ஆர். ஸ்ரீநிவாசராகவன், ஷை ,,
19 யஸ். வி. ரத்னவதி (பெண்) அமெரிக்கன் மிஷன் பெண்பாடசாலை, மதுரை, ,,
20 யம். ஏ. பாண்டியன் பிள்ளை, சி. யம். யஸ். ஹைஸ்கூல், பாளையங்கோட்டை, ,,
21 டி. வேங்கட்டராகவையங்கார், செண்டு ஜோசப் காலேஜ், கூடலூர், ,,
22 யம். யஸ். சபேசன், போர்ட்ஹைஸ்கூல், லால்குடி, ,,
23 தி. யஸ். நடராஜன், சர்ச் ஆப் ஸ்காட்லாண்டு மிஷன் காலேஜ், சென்னை, ,,
24 பி. ஜே. ராஜரத்னம், செண்டு ஜோசப் காலேஜ், கூடலூர், ,,
25 வி. ஆர். ராஜகோபாலன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம், ,,
26 ஏ. ஸ்ரீநிவாசன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, ,,
27 பி. டி. ஜேம்ஸ், அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், மதுரை, ,,
28 யன். வி. கிருஷ்ணசாமி ஐயர், நேஷனல் ஹைஸ்கூல், திருச்சி, ,,
29 ஓ. நாராயணன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை, ,,
30 யஸ். நடராஜய்யர், செண்டு ஜோசப்காலேஜ், கூடலூர், ,,
31 தி. யஸ். சோமசுந்தரமையர், ஹிந்து காலேஜ், திருநெல்வெலி, ,,
32 ஆர். சீனிவாசன், செண்டுஜோசப்காலேஜ், திருச்சி, ,,
33 ஏ. ராமசாமி, ஷை ,,
34 சி. யஸ். வெங்கட்டராமன், சபாநாயகமுதலியார் ஹிந்து ஹைஸ்கூல், சீகாழி, ,,
35 யஸ். முனியாண்டி, ஷை ,,
36 யஸ். வி. ராமசாமி, சி. யம். யஸ். ஹைஸ்கூல், திருநெல்வேலி, ,,

| | | |
|---|---|---|
| 37 | தி. யஸ். சுவாமிநாதபிள்ளை, மகாராஜாஸ்காலேஜ், திருவனந்தபுரம், | யோக்கியதாபத்திரம் மட்டும். |
| 38 | ஏ. ஒய். சுப்பிரமணியன், சபாநாயக முதலியார் ஹிந்து ஹைஸ்கூல், சீகாழி, | ,, |
| 39 | தி. ஆர். மீனுட்சிசுந்தரம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, | ,, |
| 40 | தி. பி. வெங்கடாசலம், பத்தமடைஹைஸ்கூல், பத்தமடை, | ,, |
| 41 | ஆர். சுந்தரம், மகாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை, | ,, |
| 42 | யன். ஜெகநாதன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம், | ,, |
| 43 | யம்.சுந்தரஞ்செட்டி, போர்ட்ஹைஸ்கூல், லால்குடி, | ,, |
| 44 | பி. யஸ். சங்கரன், அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல், மதுரை, | ,, |
| 45 | கே. ராமாராவ், சேதுபதிஹைஸ்கூல், மதுரை, | ,, |
| 46 | தி. சி. நம்பெருமாள்நாயடு, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, | ,, |
| 47 | வி. ராகவேந்திரராவ், சேலம் காலேஜ், சேலம், | ,, |
| 48 | தி. திருவேங்கடம், செண்டுஜோசப்காலேஜ், கூடலூர், | ,, |
| 49 | தி. யம். ராஜாராவ், செண்டுபீடர்ஸ்காலேஜ், தஞ்சாவூர், | ,, |
| 50 | கே. மீனுட்சிசுந்தரம், நேட்டிவ்காலேஜ், மதுரை, | ,, |
| 51 | ஆர்.கந்தசுப்பிரமணியம், எஸ். பி. ஜி. ஹைஸ்கூல், இராமநாதபுரம், | ,, |
| 52 | தி. யன். சுந்தரராஜன், ராஜாஸ்ஹைஸ்கூல், சிவகங்கை, | ,, |
| 53 | ஜி. புண்ணியவதி (பெண்) அமெரிக்கன்மிஷன் பெண்பாடசாலை, மதுரை, | ,, |
| 54 | சி. வை. பொன்னம்மாள், ஷெ. | ,, |
| 55 | யன். யஸ் சங்கரநாராயணன், பத்தமடைஹைஸ்கூல், பத்தமடை, | ,, |
| 56 | கே. முத்துசுந்தரம், நேட்டிவ் காலேஜ், மதுரை, | ,, |
| 57 | யன். யஸ். பொன்னம்பலம்பிள்ளை, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி, | ,, |

58 ஆர் முத்துவீரசாமி, செண்டு ஜோசப் காலேஜ், திருச்சி, யோக்கியதாபத்திர மட்டும்.
59 வி. கந்தசாமி முதலியார், சர்ச் ஆவ் ஸ்காட்லண்டு மிஷன் காலேஜ், சென்னை, ,,
60 ஆர். ஸ்ரீனிவாசன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம், ,,
61 எம். குமாரசாமி பிள்ளை, பச்சையப்ப முதலியார் கலாசாலை, காஞ்சிபுரம், ,,
62 யஸ். ஆனையப்பன், பிண்ட்லே காலேஜ், மன்னார்குடி, ,,
63 சி. யஸ். ஆறுமுகம்பிள்ளை, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி, ,,
64 எம். மதுரைநாயகம், யஸ். பி. ஜி. ஹைஸ்கூல், திருச்சி, ,,
65 பி. ஆறுமுகம்பிள்ளை, சி. யம். யஸ். ஹைஸ்கூல், பாளையங்கோட்டை, ,,
66 யஸ். நாகரத்னம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம், ,,
67 கே. வி. சுப்பிரமணியன், சபாநாயக முதலியார் ஹிந்து ஹைஸ்கூல், சீகாழி, ,,
68 யஸ். ராமசாமி ஐயர், ராஜாஸ் ஹைஸ்கூல், சிவகங்கை, ,,
69 ஏ. பெரியநாயகம், செண்டு ஜோசப் காலேஜ், கூடலூர், ,,
70 வி. ஆர் சந்தானம், நேடிவ் ஹைஸ்கூல், கும்பகோணம், ,,
71 ஜே. டானியல் தாஸ் ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோயில், ,,

உ

# விளம்பரம்.

## ஒருமுறை பாருங்கள்.

---

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும்; நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். துலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

---

திருக்கன்றாப்பூர்ப்புராண வசனம்.—விலை அணா 4.

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப் மு. கருப்பணபிள்ளையவர்களிடத்தும் என்னிடத்தும் பெற்றுக்கொள்ளலாம். இங்ஙனம்,

அ. கோபாலையன்,

எழுத்தாளன், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

மதுரைத் தமிழ்ச்சங்கப்பதிப்பிற்குச் சங்க அங்கத்தினர் செலுத்த
வேண்டிய வருட 'சந்தா'த்தொகை

ரூ. 6-யும் அன்புற்றனுப்பிய வித்துவான்கள்.

---

| | | | ரூ |
|---|---|---|---|
| 1. | மகா-ள-ள-ஸ்ரீ | பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் (அக்கிராசனாதிபதி) | 6 |
| 2. | ,, | டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்கா ரவர்கள் பீஏ. பீஎல். | 6 |
| 3. | ,, | திருநெல்வேலி கவிராஜநெல்லையப்பபிள்ளையவர்கள். | 6 |
| 4. | ,, | திரு. நாராயணையங்காரவர்கள். | 6 |
| 5. | ,, | எஸ். அரங்கசாமி ஐயங்காரவர்கள். | 6 |
| 6. | ,, | சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயரவர்கள். | 6 |
| 7. | ,, | வி. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள். | 6 |
| 8. | ,, | எம். ஆர். கந்தசாமிக்கவிராயரவர்கள். | 6 |
| 9. | ,, | அ. சண்முகம்பிள்ளையவர்கள். | 6 |
| 10. | ,, | மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள். | 6 |

வி. பி. யில் அனுப்ப எழுதிய வித்துவான்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ,, | உ. வே. சாமிநாதையரவர்கள். | 6 |
| 2. | ,, | ரெ. அப்புவையங்காரவர்கள். | 6 |
| 3. | ,, | தி. கோ. நாராயணசாமிபிள்ளையவர்கள் | 6 |